# முன்னுரை

தத்துவபோதம் என்பது வேதாந்தத்தில் பொதுவாக படிக்கும் முதல் நூலாகும். பரம்பரையில் **ஸ்ரீ வித்யாரண்ய சுவாமிகளின் பன்சதசியில்** முதல் மற்றும் இரண்டாவது பிரகரணம் இங்கு கூறப்பட்ட விஷயத்தினையே கூறுகின்றது. இது ஒரு சிறிய நூலானாலும் வேதாந்த்த சித்தாந்த்ததின் பல அடிப்படை விஷயங்களை அழகா படிப்பிக்கின்றது. இப்படிப்பட்ட விஷயங்களை ஒரு தனி நூலாக முழுவதுமாக எழுதலாம் என்ற நிலையில், **ஸ்ரீ மதுசூதன சரஸ்வதி** சுவாமிகளின் உதாரணத்திற்க்கேற்ப்ப, **ஸ்ரீ சங்கராசாரியாரின் தஷஸ்லோகி** என்ற நூலிற்க்கு அவர் எழுதிய **சித்தாந்தபிந்து** போல, தத்துவ போதத்திற்க்கு தத்துவ விசாரம் என்ற இந்த நூல் செய்யப்பட்டது.

அடிப்படையிலிருந்து கடைசி நிலைவரையிலான சிலபல விசாரங்கள் இங்கு தரப்பட்டுள்ளது. துவக்க வித்யார்த்திகள் மூலத்தினை நன்றாக புரிந்துகொண்ட பின்னர் விசாரத்திற்க்கு சென்றால் நல்லது.

இந்த கிரந்தம் வெளிவர உதவிய எல்லோருக்கும் இறைவனின் பரிபூர்ண ஆசிகள் உண்டாகட்டும். ஆஸ்திக அன்பர்கள் இதனை முறையாக படிக்க முயர்ச்சிக்கவேண்டும் என்று வேண்டுகின்றோம்.

**ரிஷிகேஷ்** **ஆசிரியர்**
**விஜயதஸமி**
**21-10-2007**



**'திராவிடாசாரியார்'** என்று அறியப்படும் **ஸ்ரீ இராமகிருஷ்ணன் ஸ்வாமிஜி** அவர்கள் 1972 ம் ஆண்டு தமிழ்நாட்டில் திண்டுக்கலில் அவதரித்தார். ஸ்ரீ ஸ்வாமிஜீ வளர்ந்தது, படித்தது கணிப்பொறி நிறுவனத்தினை நடத்தியதும் சென்னையில் என்று இருந்த நிலையில் ஆன்மீக நாட்டத்தால் 1997 ம் ஆண்டு மார்ச் மாதம் இமாலயத்திற்க்கு வந்தார். அதன்பின்னர் வேறு எங்கும் செல்லாது முழு மூச்சாக யோகீஷ்வரரான **ஸ்ரீ சாந்தி தர்மானந்த சரஸ்வதி** ஸ்வாமிகளிடம் சமஸ்கிருத வியாகரணம், சாங்கியம், யோகம், நியாயம், வைசேஷிகம், பூர்வ மீமாம்ஸை, காஷ்மீர சைவ சித்தாந்தம் மற்றும் வேதாந்தத்தின் பிருகத் பிரஸ்தான த்ரயத்தையும் (சித்சுகி , அத்வைதசித்தி, கண்டனகண்டகாத்யம் ) , அன்னாரது சிஷ்யர் விரக்த சிரோமணி **ஸ்ரீ சர்வேஷானந்த சரஸ்வதி** ஸ்வாமிகளிடம் பிரஸ்தான த்ரயத்தையும் (பகவத் கீதை, உபநிஷத், பிரம்ம சூத்திரம்) கசடற கற்றார். ஸ்ரீ ஸ்வாமிஜீ பல மொழிகளில் தேர்ச்சி பெற்றவரும் ஆவார். கற்று தருவதில் எந்த நாட்டமும் இல்லாத ஸ்ரீ ஸ்வாமிஜீ குருவின் ஆணைக்கிணங்கி சாஸ்திரங்களை, தமிழ் நாட்டிலும் கூட முறையாக இல்லாத நிலையில், ரிஷிகேசத்தில் கிரமமாக தமிழில் போதிக்கின்றார். அதுமட்டுமல்லாது , எளிய தமிழில் எல்லா சாஸ்திரத்திற்க்கும் உண்டான அடிப்படையான நூலினை தெளிவாக விளக்கியருளியிருக்கிறார். குருந்தட்டிலும் படிப்பிக்கும் முறையில் பதிவாக்கி வெளியிட்டுள்ளார்.

ஸ்ரீ ஸ்வாமிஜீ தமிழில் இயற்றிய நூல்கள் -

1. **வியாகரணம்** (இலக்கணம்) - ஸ்ரீ வரதராஜரின் லகுசித்தாந்த கௌமுதி லகுலஹரி விளக்கவுரையுடன்

2. **சாங்கியம்** - ஸ்ரீ ஈஷ்வர கிருஷ்ணரின் காரிகைகளும் கௌடபாத பாஷ்யமும், சாங்கிய லஹரி விளக்கவுரையுடன்

3. **யோகம்** - ஸ்ரீ பதஞ்சலி முனிவரின் சூத்திரங்களும் வியாச பாஷ்யமும் யோக லஹரி விளக்கவுரையுடன்

4. **தர்க்கம்** - ஸ்ரீ அன்னம்பட்டரின் தருக்க சங்கிரகமும் ஸ்ரீ சந்திரஜ சிங்கரின் பதகிருத்யமும், தர்க்க லஹரி விளக்கவுரையுடன்

5. **பூர்வமீமாம்ஸை** - ஸ்ரீ லௌகாக்ஷி பாஸ்கரரின் அர்த்த சங்கிரகம் அர்த்த லஹரி விளக்கவுரையுடன்

6. **சிவ பஞ்சாக்ஷரி பாஷ்யம்** - ஸ்ரீ சுரேஷ்வராச்சாரியாரின் பாஷ்யம்

7. **வேதாந்தம்**

- ஸ்ரீ சுரேஷ்வராசாரியாரின் நைஷ்கர்ம்யசித்தி சித்தி லஹரி உரையுடன்
- ஸ்ரீ கங்காதரேந்திர சரஸ்வதிகளின் சுவாராஜ்யசித்தி த்விதீய சித்தி லஹரி உரையுடன்
- ஸ்ரீ தர்மராஜ அத்வரீந்திரரின் வேதாந்த பரிபாஷை வேதாந்த லஹரி விளக்கத்துடன்.
- ஸ்ரீ சங்கராசாரியாரின் சாதனா பஞ்சகம் சாதனோபதேஷ லஹரி விளக்கத்துடன்.
- ஸ்ரீ சங்கராசாரியாரின் சாந்தோகிய உபநிஷத் பாஷ்யம் முதல் அத்யாயம்

.

**TattvaBodha of Sankaracharya – TattvaVicharalahari**
**Dravidacharya Sri Ramakrishnan Swamiji.**
பதிப்பு - 2007

## கிடைக்குமிடம்

**ஷாஸ்திர நேத்திராலயா**
நெ 1. ஆத்ம விஞ்ஞான பவன்
பாபா காளி கம்பளி
ராம் நகர்
பசுலோக் போஸ்ட்
ரிஷிகேஷ், இமயமலை

**Shasthra Nethralaya**
No 1. Atma Vigyana Bhavan
Baba Kali Kambli
Ram Nagar
Pasulok Post
Rishikesh, Himalayas
Web -www.ShastraNethralaya.org

अरुणेशम् नमस्कृत्य कृत्यमयम् कृतं मया ।
तत्त्वविचारलहरीं तत्त्वं विचार्य लहर्याम् ॥

அருணாசலனை வணங்கி இந்த தத்துவவிசாரலஹரி என்ற நூலானது தத்துவததினை விசாரித்து லஹரியில் - ஒரு அலையில், மயக்கத்தில், அல்லது தியானித்து என்னால் செய்யப்பட்டது.

# ॥ तत्त्व बोध ॥

# தத்துவபோதம்

## காப்பு

**वासुदेवेन्द्रयोगीन्द्रं नत्वा ज्ञानप्रदं गुरुम् ।**

**मुमुक्षूणां हितार्थाय तत्त्वबोधोभिधीयते ॥**

மூ -
யோகிகளில் தலைவரான (சன்யாசிகளில் மேன்மையானவாரான) ஞானத்தினை அளிக்கும் குருவான **ஸ்ரீ வாசுதேவேந்திரரை** வணங்கி, மோக்ஷத்தினை அடைய ஆசைப்படுபவர்களின் நன்மைக்காக தத்துவபோதம் என்னும் இந்த நூல் கூறப்படுகின்றது.

## விசாரம்

மங்களாசரணம் இல்லாமல் நூலினை துவங்குவது முறையாகாது என்பதாலும், சிஷ்யர்களுக்கு முறையினை காட்டுவதற்க்காகவும் இங்கு குரு வணக்கம் செலுத்துவதான முறையில் செய்யப்பட்டுள்ளது. அதனில் சம்பந்த சதுஷ்டயமும் கூறப்பட்டுள்ளது. இங்கு சம்பந்த சதுஷ்டயமானது கூறப்பட்ட, அதாவது, அதிகாரி, விஷயம், பிரயோஜனம் மற்றும் சம்பந்தம். அதனில் அதிகாரி முமூக்ஷு, மோக்ஷதினை அடைய விரும்புபவர். விஷயம் தத்துவபோதம். பிரயோஜனம் ஞானம், **ஞானாதேவ து கைவல்யம்** (ஞானத்தினால் மட்டுமே கைவல்யம், மோக்ஷம்) ஆகிய வாக்கியத்தால். சம்பந்தம் இங்கு இந்த நூலும் - விஷயமும் பிரதிபாத்ய - பிரதிபாதக சம்பந்தத்துடனும் (பிரதிபாத்யம் - ஜீவ - பிரம்ம ஐக்கியம், பிரதிபாதகம் - நூல்), அதிகாரியும் பலனும் பிராப்ய - பிராபக சம்பந்தத்துடனும் (பிராப்யம் - அடையப்படுவது, பலன், பிராபகம் - அடைபவர், அதிகாரி), அதிகாரியும் - விசாரமும் கர்த்ரு - கர்த்தவ்ய சம்பந்தத்துடனும் (கர்த்ரு - செய்பவர், அதிகாரி, கர்தவ்யம் - செய்யப்படவேண்டியது, விசாரம் ) மற்றும் நூளும் - ஞானமும் ஜன்ய - ஜனகபாவ சம்பந்தத்துடனும் (ஜன்யம் - தோன்றுவது, ஞானம், ஜனக - தோற்றுவிப்பது, நூல்) சம்பந்தம். எவ்வாறு நாலு

தூன்கலானது இல்லாமல் கூறையானது நிற்க்காதோ அவ்வாறு இந்த அனுபந்த சதுஷ்டயம் இல்லாமல் எந்த கிரந்தமும் பிரசாரம் அடையாது.

இதனில் அதிகாரி யார் என்கிற கேள்வி எழும் நிலையில் -

**साधनचतुष्टयसम्पन्नाधिकारिणां मोक्षसाधनभूतं तत्त्वविवेकप्रकारं वक्ष्यामः।**

சாதன சதுஷ்டயத்தினை அடைந்த அதிகாரிகளுக்கு மோக்ஷத்தினை அடையும் வழியான தத்துவவிவேகம் என்கிற முறையினை கூறுகின்றோம்.

விசாரம்

அதிகாரியானவர் (தகுதியுடையவர்) இங்கு இந்த சாஸ்த்திரத்தில் இந்த சாதன சதுஷ்டயம் என்கிற நாங்கு அடிப்படை தகுதிகளை பெற்றவறே. தாண்டவராய சுவாமிகளின் கைவல்ய நவனீதம் என்கிற நூலிலும் - சாதனை ஒன்றும் இன்றி சாதிப்பார் உலகில் இல்லை ஆதனால் இந்த நாங்கும் அடைந்தவர்க்கு அறிவுண்டாகும், என்று கூறப்பட்டுள்ளது. இங்கு அதிகாரியானவரை பற்றி முழுவதும் கூறப்படவில்லை, அதாவது, தகுதியானது மலம் மற்றும் விக்ஷேபம் ஆகியவையினை நீக்கியவர். அது எவ்வாறு என்றால், கர்மத்தினை முறையாக அதன் பலனில் பற்று இல்லாமல் செய்வதால் மலம் (பாவம்) என்கிற தோஷமானது நீங்குகின்றது. உபாசனையினால் விக்ஷேபமான தோஷமானது நீங்குகின்றது. அவ்வாறு இந்த தோஷங்களானது நீங்கினாலும் அஞ்ஞானமானது நீங்காத நிலையிலுள்ள சாதன சதுஷ்டயத்தினை அடைந்தவரே அதிகாரி ஆவார்.

கர்மம் என்றால், அது வேதத்தினில் கூறப்பட்ட, விதி மற்றும் நிஷேதமாக, அதாவது, விதிப்பதாகவும், நிராகரிப்பதாகவும் என்று. இதனில் விதியாவது இந்த கர்மத்தினை செய் என்று தூண்டுவதாக உள்ள வாக்கியம், நிஷேதமானது இதனை செய்யாதே என்று தூண்டும் வாக்கியம். உதாரணத்திற்க்கு, **ஜ்யோதிஷ்டோமேன ஸ்வர்ககாமோ யஜேத** என்பது ஜ்யொதிஷ்டோமம் எங்கின்ற ஹோமத்தினால் ஸ்வர்கத்தில் ஆசையுள்ளவர் அதனை பாவனை செய்யாவாராக என்று கூறுகின்றது. அதுபோல **சுராம் ந பிபேத், பலாண்டும் ந பக்ஷயேத்** முதலிய வாக்கியம் மது வகைகளை குடிக்காதீர், வெங்காயம்.பூண்டு தின்னாதீர் என்பது முதலாக நம்மை சில கர்மத்தினிலிருந்து விலக்குகின்றது.

சரி கர்மம் என்றால் அது எத்துனை வகைப்படும், நித்தியம், நைமித்திகம், காம்யம் மற்றும் பிராயஸ்ச்சித்தம் என்று.

நித்தியம் - எதனை செய்வதால் பலனானது எதுவும் கூறப்படவில்லையோ அனால் செய்யாததினால் பிரத்யவாயம் என்கிற பாவம் உண்டாகும் என்று கூறப்பட்டதோ அது. **அஹரஹர் சந்த்யாம் உபாசீத** முதலியவை இந்த வகைப்படும் அதாவது தினம் தினம் சந்தியாவந்தனத்தினை செய்யவும்.

நைமித்திகம் - எதனை ஏதாவது ஒரு நிமித்தம் காரணமாக செய்ய வேதமானது தூண்டுகிறதோ, அமாவாசை என்ற நிமித்தத்திலும், கிரகணம் என்ற நிமித்தத்திலும் தர்ப்பனம் செய்யவும் ஆகியவை.

காம்யம் - எதனை ஏதாவது ஒரு பலன் காரணமாக செய்யப்பட்டதோ. **காரீரி இஷ்டி** - மழைக்காக, **புத்ர காமேஷ்டி** - மகன் பிறப்பதர்க்காக, **ஜ்யோதிஷ்டோமம்** முதலிய ஸ்வர்கத்தினை அடைய செய்யப்படும் யாகங்கள் முதலியவை.

பிராயஸ்சித்தம் - எதனை முன்னர் செய்த பாவம் நீங்க செய்கின்றோமோ, கங்கை நீராடுதல், சாந்திராயனம் எங்கின்ற விரதம் முதலியவை.

இதனில் நித்தியம் மற்றும் நைமித்திகமானது, தான் செய்யவேண்டிய கடமை என்று சிந்தித்து செய்யவேண்டும், பலனிலும் கர்மத்திலும் பற்று இல்லாமல். தேவையான பிராயஸ்ச்சித்தமும் செய்யலாம். ஆனால் காம்ய கர்மத்தினை முழுவதும் நீக்கவேண்டும் மோக்ஷமடைய விருப்பமுள்ளவர்.

மோகஷமானதினை அடையவேண்டிய அவசியம் என்ன என்ற கேள்வி சரியானதல்ல, அதனை அடைய ஆசை உள்ளவரைக்குறித்தே இங்கு விசாரம் செய்யப்படுகின்றது, நாம் பிரச்சனையில் இருக்கின்றோம் என்ற அறிவு உள்ளவருக்கே, மற்றவர் தான் பிரச்சனையில் உள்ளதே தெறியாதவர்களாதலால் அவர்களுக்கு இங்கு பிரவிருத்தி கிடையாது என்றால், பின்னர் எல்லோரிடமும் காராணமற்ற கருனை என்று குருவினைப்பற்றி கூறுவது தவறானது ஆகும், அதனால், அவர்களுக்கு தாங்கள் என்ன பிரச்சனையில் இருக்கிறார்கள் என்று தெளிவிக்கவேண்டும், பூர்வ ஜன்ம புன்னியத்தால் அவர்களுக்கும் இந்த மோக்ஷத்தினை அடைய ஆசை பிறக்கலாம் என்பதால் இந்த விசாரம் -

நாம் ஒவ்வொருவரும் மூன்று வகையான துன்பத்தால் பீடிக்கப்பட்டவர்களாக இருக்கின்றோம், **ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம் மற்றும் ஆதிதைவிகம்** என்று. இதனில்,

ஆத்யாத்மிகம் - உடல், இந்திரியம், மனது இவைகளால் உண்டாகும் துன்பம்.

ஆதிபௌதிகம் - மனிதர்கள், மிருகங்கள் முதலியவையால் உண்டாகும் துன்பம்.

ஆதிதைவிகம் - யக்ஷர்கள், ராக்ஷஷர்கள் முதலியவையால் உண்டாகும் துன்பம்.

ஆனால், அதற்க்கும் இந்த சாஸ்திரத்திற்க்கும் என்ன சம்பந்தம், இதனை படிக்காமலேயே அவைகளை நீக்க இயலும் என்பதால், எவ்வாறு ? மணி, மந்திரம், ஔஷதிகளால், அதாவது, முதல வகையினை மருந்துகளாலும், இரண்டாவதினை மந்திரத்தாலும் மூன்றாவது வகையினை மந்திரத்தாலும், மணிகளாலும் என்றால், தவறு, அதனால் அவை தார்க்காலிகமாகவே நீக்கப்படுகின்றது என்பதால், நிரந்தரமான நீக்கத்திர்க்கும், இனி வராது இருப்பதற்க்கும் அதனால் இயலாது என்பதால், இந்த சாஸ்திரத்தினில் பிரவேசிக்க வேண்டியது அவசியம் ஆகின்றது, நிரந்தரமாக துன்பம் நீங்கவும் நிகரில்லாத இன்பத்தினை அடையவும், அதுவே மோக்ஷம் என்பதால், சுவர்கம் முதலியவையோ **க்ஷீனே புண்ணியே மர்த்யலோகே விஷந்தி** புண்ணியம் தீர்ந்த்தால் பிறப்பு - இறப்பு உள்ள இந்த உலகத்தை மீண்டும் வந்தடைகின்றார் என்பதால், மோக்ஷமோ நம்முடைய இயல்பான நிலை என்பதால், அதனை அடைய இந்த சாஸ்திரத்தினில் முறையாக பிரவேசிப்பது அவசியம் ஆகின்றது.

## சாதனை சதுஷ்டயம்

**साधनचतुष्टय किम् ?**

சாதன சதுஷ்டயம் என்றால் என்ன.

### விசாரம்

சாதன சதுஷ்டயமான நாங்கு அடிப்படை தகுதிகளானது என்ன.

**नित्यानित्यवस्तुविवेकः। इहामुत्रार्थफलभोगविरागः। शमादिषट्कसम्पत्तिः। मुमुक्षुत्वं**

चेति ।

நித்திய மற்றும் அனித்திய விஷயத்தினை (வஸ்துவினை) குறித்த அறிவு, இங்கு மற்றும் வேறு லோகத்தில் உண்டாகும் பலனில் பற்றின்மை, ஷமம் முதலிய ஆறு அடைதல் மற்றும் முமுக்ஷுத்தன்மை.

**விசாரம்**

இங்கு கூறப்பட்ட ஒவ்வொன்றயும் விளக்கமாக காண்போம்.

**नित्यानित्यवस्तुविवेकः कः ?**

**नित्यवस्त्वेकं ब्रह्म तद्व्यतिरिक्तं सर्वमनित्यम्। अयमेव नित्यानित्यवस्तुविवेकः।**

நித்திய-அநித்திய வஸ்து விவேகம் என்றால் என்ன.

நித்திய வஸ்துவானது (விஷயமானது) பிரம்மம் ஒன்றே, அதனை விடுத்து மற்ற எல்லாமே அநித்தியம். இதுவே நித்திய-அநித்திய வஸ்து விவேகம்.

**விசாரம்**

இங்கு சைத்தன்யமான ஆத்மா மட்டுமே நித்தியம், எதனின் காரியமாகவும் இல்லாததால். அதனை தவிற மற்ற எல்லாம் அநித்தியம் காரியமானதால், **எத் எத் கிருதகம் தத் தத் அநித்தியம்** என்கிற நியாயத்திற்க்கு ஏற்ப இந்த பார்க்கப்படும் காரியாமான பிரபஞ்சம் முழுவதும் அநித்தியம் என்கிற அறிவே நித்யாநித்ய வஸ்து விவேகம். ஆனாலும், இங்கு கூறப்பட்டது சாமானியமான அறிவே ஆகும், காரணம் இந்த அறிவு முழுமையாக இருந்தால் இந்த சாஸ்த்திரமானது அவருக்கு அவசியம் இல்லாமல் போகும், முன்னரே ஞானத்தினை அடைந்தவரானதால் என்பதினை நினைவில் கொள்ளவேண்டும். இவ்வாறு கூறினால், உண்மையில் பாலில் உள்ள நீரினை விடுத்து பாலை மட்டும் பருகும் அன்னத்தினை போல, இங்கு ஆத்மா மற்றும் அனாத்மவினை குறித்த திடமான ஞானமே கூறப்பட்டது, காரணம் இந்த விவேகத்தினால் நமக்கு இந்த ஜகத்தானது மித்யா எங்கின்ற அறிவே தோன்றுகின்றது, அபரோக்ஷமான ஞானம் இல்லை என்பது தெளிவாக வேண்டும். அதனாலேயே இந்த சாஸ்திரத்தை படித்தாலும், வைராக்யம்

முதலியவை இல்லாமல் போனால் அவருக்கு ஆத்ம ஞானமானது உண்டாவதில்லை என்று காணப்படுகின்றது.

**विरागः कः** ?

**इहस्वर्गभोगेषु इच्छाराहित्यम् ।**

விராகம் என்றால் என்ன.

இங்கு (இந்த உலகினில்) சுவர்கத்திலும் (வேறு உலகத்திலும்) உள்ள அனுபவங்களில் பற்றின்மை.

**விசாரம்**

இங்கு உள்ள விஷயங்களில் (அர்த்தம்) மற்றும் மற்ற உலகங்களில் உள்ள விஷயங்களில் உண்டாகும் பலன்களினை அனுபவிக்க ஆசையற்ற நிலையே இரண்டாவது அடிப்படை. இது எவ்வாறு என்றால், விஷயமானது இந்த உலகத்திலிருந்து பிரம்ம லோகம் வரையில் எல்லாம் துன்பம் கூடியது என்றும், அதனில் தோஷத்தினை காண்பதாலும் அதனில் விருப்பு-வெறுப்பு அற்றத்தன்மை.

இந்த வைராக்கியத்தினை யோகத்தில் நான்காக பிரிக்கின்றனர், **யதமானம்** - மந்தமான அறிவு (புத்தி), **வியதிரேகம்** - சத்சங்கத்தினால் நல்ல விஷயத்தினை அடையவும் கெட்ட விஷயத்தினை நீக்கவும் உற்ச்சாகம் தோன்றல், **ஏகேந்த்ரியம்** - விஷயங்களில் ஈடுபடாமல் புலங்கலை தடுத்தல், **வஷீகாரம்** - முழுமையாக எல்லா விஷயங்களிலிருந்தும் மனதானது தடுத்தலே. அதுவும் மந்தம், தீவிரம் மற்றும் தீவிரதரம் என்று மூன்றுவகைப்படுகின்றது. அப்ரோக்ஷமான ஞானத்தினை அடைய அந்தரங்கமான சாதனாமாக ஏற்க்கப்படும் தீவிரதரமான வைராகியத்தினை மோக்ஷம் அடைய ஆசைப்படுபவர்கள் முயற்ச்சித்து அடையவேண்டும்.

**शमादिसाधनसम्पत्तिः का** ?

**शमो दम उपरमस्तितिक्षा श्रद्धा समाधानं च इति ।**

ஷமம் முதலிய அடைவுகலானது என்ன.

ஷமம், தமம், உபரமம், திதிக்ஷா, ஷ்ரத்தா மற்றும் சமாதானம் என்பதும் ஆகும்.

**விசாரம்**

இந்த ஒவ்வொன்றினையும் விளக்கமாக காண்போம்.

**शमः कः ?**

**मनो निग्रहः ।**

ஷமம் என்றால் என்ன.

மனதினை முறைப்படுத்துதல் (கட்டுப்படுத்துதல்)

**விசாரம்**

ஷமம் என்பது **அந்தரிந்திரிய நிக்ரஹம்** என்றும் கூறப்படுவது உண்டு, அதாவது அகக்கரண தண்டம். இது எவ்வாறு என்றால், நம்முடைய பழைய (பூர்வ) ஜன்மத்தின் வாசனைகளானது மிகவும் பிரபலாமாக (சக்தியுள்ளதாக) இருந்தால், விசாரம் செய்வது என்பது இயலாது என்பதால், அதனை முயர்ச்சியினால் விடுவதால் விஷயத்திலிருந்து மனதினை திருப்புவது ஆகும். **பரான்சிகானி வ்யதிருனத் ஸ்வம்பூ தஸ்மாத் பராங்க்பஷ்யதி நாந்த்ராத்மன்** - பராக்கு (வெளியில்) பார்ப்பதாகவே பிரம்மாவானவர் இந்த இந்திரியங்களை (புலங்களை) படைத்திருப்பதால், அது வெளியில் பார்ப்பதாகவே உள்ளது ஆத்மாவினை அல்ல, அதனால் முயர்ச்சித்து இதனை தடுத்து நிருத்துதல் ஷமம்.**மன ஏவ மனுஷ்யாணாம் காரணம் பந்தமோக்ஷயோ:**, மனதே மனுஷ்யர்களின் பந்தத்திர்க்கும் மோக்ஷத்திர்க்கும் காரணமாகின்றது, விஷயத்தோடு சம்பந்தத்தால் பந்தமும் விஷயமற்ற நிலையில் மோக்ஷம்த்திர்க்கும் என்று. **சினமிறக்க கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும் மனமிறக்க கல்லார்க்கு வாராயென் பராபரமே** என்று தாயுமான சுவாமிகள் கூரியது போலவும்.யோக சாஸ்திரத்திலும், யோகமானது என்ன என்று கூரும் முதல் சூத்திரத்தில், **யோக: சித்தவிருத்தி நிரோத:** - யோகமானது சித்தத்தின் (மனதின்) எண்ண அலைகலை தடுப்பது, கட்டுப்படுத்துவது, என்று கூறப்பட்டுள்ளது. **மனமது செம்மையானால் மார்கமது நேரார்ர்க்கும்** முதலிய ஆன்றோர் வாக்கும்.

**दमः कः ?**

**चक्षुरादिबाह्येन्द्रियनिग्रहः ।**

தமம் என்றால் என்ன.

கண் முதலிய வெளியில் உள்ள புலன்கலினை கட்டுப்படுத்துதல்.

**விசாரம்**

தமம் என்பது **பாஹ்யேந்த்ரிய நிக்ரஹம்** அதாவது, புரக்கரண தண்டம். புலன்கலை அதனதன் விஷயங்களிலிருந்து நீக்குவது. அது எவ்வாறு என்றால், ஒரு இந்திரியத்தால் கட்டுப்பட்ட மான் முதலிய மிருகங்கள் அழிவது காணப்படுவதால், ஐந்து இந்திரியங்களால் கட்டப்பட்ட மனிதனின் நிலை என்னாவது என்று சிந்தித்து அந்தந்த விஷயங்களில் தோஷத்தை கண்டு அதனில் ஈடுபடாது இருத்தல். மான் (கஸ்தூரி மான்) வாசனையினால், மீன் நாக்கினால், யானை தொடு உணர்ச்சியினால், விட்டில் பூச்சி வெளிச்சத்தினால் மற்றும் பாம்பு நாதத்தினால். அதனால் விஷயத்தில் ஈடுபடாது சாஸ்த்திரத்தினை கேட்டல், சிந்தித்தல் மூலமாக தெளிவினை அடையவேண்டும்.

**उपरमः कः ?**

**स्वधर्मानुष्ठानमेव ।**

உபரமம் என்றால் என்ன.

தன்னுடைய தர்மத்தினை கடைப்பிடித்தலே.

**விசாரம்**

தர்மம் அதாவது வேதத்தில் கூறப்பட்ட விஷயங்கள். இப்படி தர்மத்தினை கடைப்பிடித்தல் என்று கூறினாலும், இங்கு காமிய கர்மத்தினை விடுத்து நித்திய, நைமித்திக மற்றும் பிராயஸ்சித்த கர்மங்களை கூறுகின்றது என்று அறியவேண்டும். காரணம், உபரதி என்றால், இங்கு மற்றும் வேறு உலகத்தில் உண்டாகும் பலன்கலுக்கு காரணமான லௌகிகமான மற்றும் வைதிகமான கர்மங்களையும்; மாலை, வாசனைப்பொருட்கள் மற்றும் பெண் முதலிய

விஷயங்ளை விஷத்தினைப்போல கருதி விளக்கவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. இதனால் இங்கு ஒரு சந்தேகம் எழ வாய்ப்புள்ளது, அதாவது, இந்த உபரதிக்கும் முன்னர் கூறப்பட்ட வைராக்கியத்திற்க்கும் என்ன வித்யாசம் என்று, அதாவது நம்முடைய முற்ப்பிறவிபயனால் இப்போது உண்டாகக்கூடிய ஆசைகளினை கட்டுப்படுத்துவது உபரதி, அதுபோல, தோன்றாத அல்லது அடையப்படாத விஷயங்களில் தோஷத்தினை காண்பது மூலம் அதனை விடுவது வைராக்கியம்.

**तितिक्षा का ?**

**शीतोष्णसुखदुःखादिसहिष्णुत्वम् ।**

திதிக்ஷா என்றால் என்ன.

குளிர்ச்சி - சூடு (வெப்பம்), இன்பம் - துன்பம் முதலியவைகளை சகித்துக்கொள்வது.

**விசாரம்**

நான்காவதான திதிக்ஷா அதாவது சகித்தல் கூறப்படுகின்றது.

குளிர்மை - வெப்பம், இன்பம் - துன்பம், பசி - தாகம் முதலிய இரட்டைகளை பொருத்தல் திதிக்ஷா எனப்படும் சகித்தல் ஆகும். வேதாந்தத்தை கேட்க்கவும், சிந்திக்கவும் இடையூராக இருக்கும் இரட்டைளை பொருத்துகொள்ளவேண்டும் இல்லாவிட்டால் அவை சரியாக செய்ய இயலாது போகும்.

**श्रद्धा कीदृशी ?**

**गुरुवेदान्तवाक्यादिषु विश्वासः श्रद्धा ।**

சிரத்தை எப்படிப்பட்டது.

குரு மற்றும் வேதாந்த வாக்கியம் முதலியவைகளில் விஷ்வாசம் சிரத்தை.

**விசாரம்**

குரு கூறும் வாக்கியத்திலும், வேதாந்த வாக்கியம் முதலியவைகளிலும் திடமான விஷ்வாசம் (நம்பிக்கை என்பதைவிட தீர்மானம் சரியாகும்) சிரத்தை எனப்படுகின்றது. ஆனால் ஒரு விசாரம், இங்கு குரு கூறும் வார்தையிலா அல்லது குரு கூறும் வேதாந்த வார்தையிலா, என்றால், குரு கூறும் என்றால் அவர் கூறும் சாஸ்த்திர சம்மதமான வார்த்தைகள், காரணம் **சர்வசாஸ்திரஞோபி அஸம்ப்ரதாயவித் மூர்க்கவதுபேக்ஷனீய** என்ற பாஷ்யகாரரின் வார்த்தைக்கு ஏற்ப, எல்லா சாஸ்த்திரங்களும் படித்திருந்தாலும் சம்பிரதாயத்திர்க்கு எதிரான வார்த்தைகளை கூறுபவரை முட்டாலினைப்போல சட்டை செய்யாதிருக்கவேண்டும். இங்கு, முதலிய என்பதால் ஈஷ்வரனை ஏற்க்கவேண்டும். **யஸ்ய தேவே பராபக்தி யதா தேவே ததா குரோ:** என்பதால், அவனுக்கு ஈஷ்வரனிடத்தில் மேன்மையான பக்தியுள்ளதோ அதுப்போலவே குருவினிடத்திலும், அவனுக்கே சாஸ்த்திரத்தின் பொருளானது விளங்கும் என்பதால், பக்தியானது சிரத்தைக்கு அடிப்படையாக ஆகின்றது.

அதனால்தான் முண்டகோபநிஷதிலும், **ச குருமேவாபிகச்சேத் ஷ்ரோத்ரியம் ப்ரம்மனிஷ்டம்** என்று ஷ்ரோதிரியரானவரும், சாஸ்த்திரத்தினை முறைப்படி படித்தவர், பிரம்மனிஷ்டர் அதன் பொருளை உணர்ந்தவர் என்று கூறப்பட்டது. சரியான குரு ஷ்ரோத்திரியராகவும் பிரம்ம நிஷ்டராகவும் இருத்தல்வேண்டும் என்பது குருவின் லக்ஷணம், மத்திய குரு ஷ்ரோத்திரியராக இருந்தாக் மட்டு போதும் என்றும், பிரம்ம் நிஷ்டராக மட்டும் இருப்பவர் அதம குரு என்றும் கருதப்படுவார். இதற்க்கு காரணம் அவர் தான் உணர்ந்த பரம்பொருளை மற்றவருக்கு போதிக்க திறன்படித்தவராக இல்லாததால்.

இங்கு மீண்டும் ஒரு விசாரம், நாம் அனாதைகள் என்று எவரை குறிப்பிடுகின்றோம் உலகத்தில் தாய் தந்தையர் இல்லாதவரையே, அதேபோல இந்த ஞான அல்லது உண்மையினை உணரும் வழியிலோ எவரொருவர் குரு இல்லாதவ்ரோ அவரே அனாதை எனப்படுவார். எவ்வாறு பெற்றோரால் கண்டிக்கப்படாத பிள்ளை தவறான வழி நடக்கின்றானோ அதுபோல குருவற்றவன் தவறான வழியினை அடைகின்றான், **ஆசார்யவான் புருஷோ வேத** ஆசார்யனை உடைய மனிதன் அறிகின்றான், **குரு தொட்டுக்காட்டாத வித்தை சுட்டுப்போட்டாலும் வராது** முதலிய வார்தையே பிரமாணம்.

குருசேவையும் ஆத்மசாக்ஷாத்காரத்திற்க்கு சாதனையாக ஏற்க்கப்பட்டுள்ளது, இந்த பக்தியானது ஒன்பது வகைப்படும் - சிரவணம் (பெருமைய்யினை கேட்டல்), கீர்தனம் (பெருமையினை கூறுதல்), ஸ்மணம் (சிந்தித்தல்), பாதசேவனம் (பாதங்களை தொழுதல்), அர்சனம் (பூஜித்தல்), வந்தனம் (வணங்குதல்), தாஸ்யம் (சேவை செய்தல்), சக்யம் (தோழமை), ஆத்மநிவேதனம் (தன்னையே சமர்ப்பித்தல்) என்றும்.

## समाधानं किम् ?

## चित्तैकाग्रता ।

சமாதானம் என்றால் என்ன.

சித்தம் ஒருமுகப்படுவது.

**விசாரம்**

சித்தம் என்றால் மனது. அது ஒருமுகப்படுவது என்றால், எதனில் என்று கேள்வி எழும், அது நமது லக்ஷியமான பிரம்மத்தில் ஆகும். இங்கும் மற்றொரு சந்தேகம் எழலாம், அதாவது இதற்க்கும் முன்னர் கூறப்பட்ட, விளக்கத்தில், உபாசனையினால் விக்ஷேபமான தோஷமானது நீங்குகின்றது என்று, அதற்க்கும் இதற்க்கும் என்ன வித்யாசம் என்று, அதற்க்கு கூறுவோம், முன்னர் கூறப்பட்டது சகுன உபாசனையினால் உண்டாவது, இதுவோ நிர்குண உபாசனையினால் அதாவது நிர்குண பிரம்மத்தினை சிந்தித்தலால், சாஸ்திரத்தினை சிந்தித்தலால் உண்டாவது என்று.

ஜபமானது மூன்று வகைப்படும், **உச்சை:, உபாம்ஷு மற்றும் மானசம்** என்று. உச்சை: என்றால் சத்தமாக மந்திரத்தினை கூறுவது. உபாம்ஷு என்றால் மெதுவாக, முனுமுனுப்பது போல கூறுவது, மானசம் என்றால் மனதில் மட்டும், வெளியில் கூறாமல் செய்யப்படுவது.

அதுபோல, உபாசனையும் இரண்டு வகைப்படும், **பிரதீக மற்றும் அஹம்கிரக** என்று. பிரதீக என்றால் மூர்த்தி (சிலை) முதலிய உருவவழிபாடு. அஹம்கிரக என்றால் வேதாந்த விஷயத்தினை சிந்தித்தல்.

இங்கு முக்கியமாக நினைவில் கொள்ளவேண்டியது, இந்த ஆறும் ஒரு சாதனையாக ஏற்க்கப்பட்டதால் விவேகம் முதலிய நான்கே சாதனைகளாக கருதப்படுகின்றது. காரணம் இந்த ஆறும் ஒன்று மற்றொன்றினை சார்ந்ததாக இருப்பதால், உதாரணத்திர்க்கு, மனது கட்டுப்படாமல் இந்திரியமமானது கட்டுப்படாததாகின்றது என்பதாலும், அது (ஷமம்) இல்லாமல் சிரத்தை உண்டாக இயலாது என்பதால், ஷமம் இல்லாமல் சித்த ஒருமைப்பாடான சமாதானம் இயலாததால் , ஷமம் இல்லாமல் உபரதியும் (கடமையினை கடைப்பிடித்தல்) இயலாததால், ஷமம் இல்லாமல் சகித்தல் இயலாததால் என்பதுபோல. இப்படியே மற்றவையிலும் அறியவேண்டும்.

நமக்கு மோக்ஷம் உண்டாக சிரவணம், மனனம் மற்றும் நிதித்யாசனம் (கேட்டல், சிந்தித்தல் மற்றும் தெளிதல்) முக்கியமான அந்தரங்கசாதனை என்று கூறப்பட்டது.இதனால் என்ன பிரயோஜனம் என்றால், நம்முடைய சந்தேகமானது சிரவணம் மற்றும் நிதித்யாசனத்தால் தீரும். சந்தேகமானது, பிரமாணத்தில் மற்றும் பிரமேயத்தினில் உண்டாவது என்று இருவகைப்படுகின்றது. அதாவது பிரமாணத்தினில் வேதாந்தத்தினில் இது நமக்கு இரண்டற்ற பிரிவற்ற பிரமத்தினை போதிக்கின்றதா அல்லது வேறு விஷயத்தினையா என்று இது சிரவணத்தாலும். பிரமேயத்தினில் உண்டாகும் சந்தேகமான ஜீவனும் பிரம்மமும் பிரிவற்றதா அல்லது வேறுபட்டதா என்பது இது மனனத்தினால் தீரும். நிதித்யாசனமோ நமக்கு பல பிறவிகளாலான தவறான நிச்சயமான இந்த பிரபஞ்சமும், ஜீவ - பிரம்ம பிரிவும் உண்மையே என்ற விபரீத பாவனையினை (நிச்சயத்தினை) நீக்கும்.

பிரிவு என்றால் அது மூன்று வகைப்படும், சஜாதீயம், விஜாதீயம் மற்றும் ஸ்வகதம் என்று, அதாவது, சஜாதீயம் - சமான ஜாதியின், ஒரே வகையான விஷய்த்தினில் உண்டாகும் பிரிவு, வெவேறு மாமரங்களில் உண்டாகும் பிரிவு. விஜாதீயம் என்றால் பல்வேறு ஜாதியின் இடையில் உண்டாகும் பிரிவு, பல மரங்களின் இடையே உண்டாகும் பிரிவு. ஸ்வகத என்றால் ஒரே விஷய்த்தில் தன்னிலேயே உண்டாகும் பிரிவு, ஒரே மாமரத்தினில் உள்ள இலை, காய் மற்றும் கணிகள் முதலியவை.

**मुमुक्षुत्वं किम् ?**

**मोक्षो भूयाद् इति इच्छा ।**

முமுக்ஷுத்தன்மை என்றால் என்ன.

மோக்ஷமானது எனக்கு உண்டாகட்டும் என்ற (திடமான) ஆசை.

**விசாரம்**

முமுக்ஷுத்தன்மையான மோக்ஷமானது எனக்கு உண்டாகட்டுமாக என்ற ஆசையும், இங்கு இரண்டாவது அடிப்படைக்கு (வைராகியத்துக்கு) விரோதமாக இருப்பது போல தோன்றினாலும், அதாவது, சாதாரனாமாக, ஆசையற்ற நிலை என்று கூறிவிட்டு, மோக்ஷத்தில் ஆசை என்றால் என்பது போன்று. இந்த விஷயத்தினை நன்றாக புரிந்துகொள்ளவேண்டும், அதாவது, ஆசை என்பது நாம் முன்னர் அடையாத விஷயத்தில் உண்டாவது, ஆனால், மோக்ஷமானது நம் இயல்பான நிலையானதால், அதனை அடைய ஆசை என்பது, அறியாமையினால், நம் கழுத்தில் இருக்கும் மாலையினை தொலைந்ததாக நினைத்து தேடி அதனை அடைய ஆசைப்படுவது போல. எதற்க்கு நம் இயல்பான நிலையினை அடைய ஆசைப்படவேண்டும், நான் என்ற சொல்லிற்க்கு நாம் புரிந்துகொள்ளும் பொருளானது உடல் முதலியவையாக ஆனதால், நம் இயல்பான அழிவடையாத ஆத்மாவினை தெறிந்துகொள்ளாததால் உண்டாகும் பலவகை துன்பங்களில் இருந்து விடுதலை அடையவும், நித்தியமான அமைதியினை அடையவும்.

மீண்டும், ஆசையானது உண்டாகவேண்டுமானால் அந்த விஷயத்தினை குறித்த அற்வானது அவசியமாகின்றது, காரணம், ஒவ்வொரு செயலும் மூன்று நிலைகளில் நடைபெறுகின்றது, முதலில் ஞானம், பின்னர் இச்சா அதன் பின்னர் பிரவிருத்தி என்று, அதாவது நாம் அடையவேண்டிய விஷயத்தினை குறித்த அறிவு, அதனை நாம் அதியவேண்டும் என்ற ஆசை அதன்பின்னரே அதனை அடையவேண்டிய வழிகளில் முயர்ச்சி. ஆனால் நமக்கு மோக்ஷம், ஆத்மா என்ற அறிவானது இல்லாததால் அதனை அடைய ஆசை எவ்வாறு உண்டாகமுடியும், அதாவது தெரிந்த விஷயத்தினை குறித்து ஆசையானது உண்டாவது இயலாது, தெறியாத விஷய்த்தினை குறித்த ஆசை உண்டாக இயலாது, என்றால், இதற்க்கு பதில், நமக்கு நம்மை குறித்த சாதாரண அறிவானது எப்பொழுதும் உள்ளது, நான் இருக்கி றேன் என்று நான் இல்லை என்றில்லை அதுமட்டுமல்லது, நாம் எல்லோரும் ஏதாவது ஒரு இன்பத்தினை அனுபவித்து இருகிறோம், இனிப்பு உண்பதினாலோ அல்லது விளையாட்டிலோ, அதனை அந்த விஷத்தினால் உண்டானது என்று தவறாக என்னுகின்றோம், ஆனால் உண்மையில் இந்த ஆத்மாவானது இன்பமே இயல்பானது என்பதால், நாம் மற்றவற்றில்

அடையும் ஆசையானது ஆத்மாவின் மேலுள்ள ஆசையாலேயே , நமக்கு ஆத்மாவினை குறித்த அறிவு, சாமான்யமானதாக இருந்தாலும், இருக்கின்றது என்று அறியமுடிகின்றது.

விவேகமில்லாத வைராக்யம் முரட்டுத்தனத்திற்க்கும், வைராக்யமில்லாத விவேகம் வரட்டுத்தனத்திற்க்கும் காரணமாகின்றது.

**एतत् साधनचतुष्टयम् ।**

**ततस्तत्त्वविवेकस्याधिकारिणो भवन्ति ।**

இது சாதனசதுஷ்டயம் ஆகும்.

இதனை அடைந்தப்பின்னர் தத்துவவிவேகத்திற்க்கு தகுதியுடையவராகின்றார்.

**விசாரம்**

இதனால் நாங்கு மட்டுமே சாதனைகள் ஒன்பது அல்ல என்று நிச்சயிக்கப்படுகின்றது.

இங்கு கூறப்பட்ட சாதன சதுஷ்டயமானது சாதாரணமாக இருந்தால் கூட அவர் இந்த சாஸ்திரத்தில் பிரவேசிப்பதர்க்கு அதிகாரி (தகுதியுடையவர்) ஆகின்றார். சாஸ்திர அத்யயனம் என்பது ஒரு சாதனையாக ஏற்க்கப்பட்டதால். அதாவது விவேகம் முதலியவையும், சிரவணம் முதலியவையும், தத் மற்றும் த்வம் சொற்ப்பொருளினை விசாரித்தல் ஆகியவை அந்தரங்க சாதனைகளாகவும். யஞ்ஞும், தானம், தபஸ் முதலியவை பஹிரங்க சாதனைகளாகவும் ஏற்க்கப்பட்டுள்ளது.

**तत्त्वविवेकः कः ?**

தத்துவவிவேகம் என்பதென்ன.

**விசாரம்**

தத்துவவிவேகத்திற்க்கு தகுதியுடையவராகின்றார் என்று கூறிய பின்னர் தத்துவவிவேகம் என்றால் என்ன என்ற கேள்வி நியாமாக எழும். அதற்க்கு.

இந்த தத்துவவிவேகத்திற்கு நாம் பிரமாணமாக வேதாந்தத்தினை ஏற்க்கின்றோம். பிரமாணம் என்றால், சரியான ஞானத்தினை அடையும் கருவி, இங்கு சரியான என்று தராமல்விட்டால் பிரமையான தவறான ஞானத்தினையும் அது குறிக்கும் என்றாகும், அடுத்து சரியான கருவி என்று கூறாததற்க்கு காரணம், காரணம் சரியானதாக இருந்தாலும் தவறானதாக இருந்தாலும் நமக்கு லக்ஷியமே முக்கியம் என்பதாலும், சரியான ஞானமானது உண்டாக, அதாவது பிரத்யக்ஷம ஆவதே, பிரத்யக்ஷம் என்றால், பிரமாத்ரு சைதன்யமும் விஷய சைதன்யமும் ஒரே நிலையில் இருப்பது, என்பதால்.

இந்த பிரமாணமானது ஆறு, பிரத்யக்ஷம், அனுமானம், உபமானம், ஷாப்தம், அர்தாபத்தி மற்றும் அனுபலப்தி என்பது. (இதனை எமது வேதாந்தலஹரியில் விளக்கமாக காண்க).

## आत्मा सत्यं तदन्यत् सर्वं मिथ्येति ।

ஆத்மா உண்மை, அதனைவிடுத்து மற்றெல்லாம் மித்யா.

**விசாரம்**

சத்யம் என்றால் உண்மை என்பதுபோல, மித்யா என்பது பொய் என்று கூறுவது தவறு. காரணம், இந்த உலகமானது வேதாந்தத்தினை பொருத்தவரை பொய்யல்ல ஆனால் அதற்க்கு மாறாக கானல் நீரினைப்போல, கயிரில் பாம்பு போல தோன்றுவது. அதனால், மித்யா என்பதற்க்கு லக்ஷணம் (குறி) அநிர்வசனீயம் (இப்படி என்று கூறப்பட இயலாதது) என்றோ சத் - அஸத் உபய விலக்ஷனத்வம் (சத் மற்றும் அஸத் ஆகியவையினை காட்டிலும் வேறானது) என்றோ கூறலாம்.

அதாவது இந்த பந்தமாவது தோன்றுவதர்க்கு காரணம் அத்யாசமே (ஏற்றிப்பார்த்தலே), அது அல்லாததில் அதனை ஏற்றிப்பார்ப்பது, பாம்பல்லாததில் (கயிரில்) பாம்பினைப்பார்ப்பது. இந்த அத்யாசமானது இருவகைப்படும் **அர்த்தாத்யாசம் மற்றும் ஞானாத்யாசம்** என்றும். பிராந்தி ஞானமான விஷயங்களில் (பாம்பு - கயிரில், வெள்ளி - சிப்பியில்) தோன்றுவது அர்த்தாத்யாசம். அப்படிப்பட்ட மித்யயையான அறிவானது ஞானாத்யாசம் ஆகும்.

அர்த்தாத்யாசமானது இருவகைப்படும் சுவரூப மற்றும் சம்சர்க அத்யாசம் என்று, அஞ்ஞானமும் அதன் காரியமும் சைதன்யத்தினில் சுவரூபாத்யாசம், சச்சிதானந்தமான ஆத்மாவானது அஞ்ஞானமும் அதன் காரியத்திலும் ஸம்சர்க (சேர்க்கை) அத்யாசம் ஆகும்.

ஞானாத்யாசமும் இருவகைப்படும் பரோக்ஷம் மற்றும் அபரோக்ஷம் என்று.

இங்கு வேறொரு விஷயத்தினையும் நினைவில் கொள்ளவேண்டும், ஆதாரம் மற்றும் அதிஷ்டானம் என்ற இரண்டும் சொற்க்கள் வேதாந்தத்தில் உப்யோகிக்கும்போது, ஆதாரம் என்றால், அது அதனுடைய சாமான்ய நிலை, அதிஷ்டானம் என்றால் அது விசேஷ நிலை, உதாரணத்திற்க்கு, கயிரில் இரண்டு நிலைகள், இது என்பது சாமான்ய நிலை, கயரு என்பது விசேஷ நிலை, அதுபோல பிரம்மத்திலும், சத் ரூபம் (இருத்தல் நிலை) என்பது சாமான்ய நிலை, நித்தியம், சுத்தம், முக்தம், அசங்கம் முதலியவை விசேஷ நிலை.

## आत्मा कः ?

ஆத்மா என்பதென்ன.

**விசாரம்**

சத்யம் அதனையே அடையவேண்டும் என்பதால், ஆத்மாவினை குறித்த நாம் தேடுவதினை குறித்த அறிவு உண்டானாலேயே நாம் சரியாக தேடுவது இயலும் என்பதால். முறையானது, ஞானம், இச்சா மற்றும் பிரவிருத்தி, அதாவது, நாம் தேடும் பொருளினை குறித்த அறிவு, அதனை அடைய ஆசை மற்றும் அதனை அடைய முயர்ச்சி என்பது. அதனால் நாம் தேடும் ஆத்மா என்ன என்ற கேள்வி இங்கு இயல்பானதே. அதற்க்கு பதிலாக.

**स्थूलसूक्ष्मकारणशरीराद्व्यतिरिक्तः पञ्चकोशातीतः सन् अवस्थात्रयसाक्षी सच्चिदानन्दस्वरूपः सन् यस्तिष्ठति स आत्मा ।**

ஸ்தூலம், சூக்கும மற்றும் காரண சரீரங்களை காட்டிலும் வேறானதும், பஞ்சகோசத்தினை கடந்தும், மூன்று நிலைகளுக்கும் சாக்ஷியாகவும் சத்-சித்-ஆனந்த இயல்பானதுமாக உள்ளதாக எது இருக்கின்றதோ அது ஆத்மா.

**விசாரம்**

மேலே காணப்போகும் ஸ்தூல, சூக்கும மற்றும் காரண சரீரங்களை காட்டிலும் வேறானதாக. அன்னம், பிராணம், மனம், புத்தி, விஞ்ஞானம் மற்றும் ஆனந்தம் ஆகிய ஐந்து கோஷங்களை (உறைகளை, போர்வைகள்) கடந்து இருப்பதும். ஜாக்ரத், ஸ்வப்னம் மற்றும் சுஷுப்தி என்பதான விழிப்பு, கனவு மற்றும் தூக்கம் ஆகிய மூன்று நிலைகளை சாக்ஷியாக பார்த்துக்கொண்டிருப்பதும். சத், சித் மற்றும் ஆனந்தம் ஆகிய இருத்தல், அறிவு மற்றும் ஆனந்தம் என்பது சுவரூபமான (இயல்பான). இப்படி எது இருக்கின்றதோ அதுவே ஆத்மா ஆகும்.

## स्थूलशरीरं किम् ?

ஸ்தூல சரீரம் என்பதென்ன.

**விசாரம்**

சரீரம் என்றால் **ஷீர்யதே இதி** அதாவது எது நாசம் அடையும் தன்மையுள்ளதோ அது. அல்லது **போகாயதனம்** அதாவது போகங்களை அடைவதற்க்கு இடமாவது. கடந்த விசாரத்தில் நாம் ஆத்மாவினை குறித்து விசாரனையினை செய்யும்பொழுது மூன்றுவகையான சரீரங்களை குறித்து கூறப்பட்டதினை கண்டோம். அதனை முதலில் ஸ்தூலமான் சரீரத்தினை குறித்து இங்கு காண்போம்.

## पञ्चीकृतपञ्चमहाभूतैः कृतं सत्कर्मजन्यं सुखदुःखादिभोगायतमं शरीरम् अस्ति जायते वर्धते विपरिणमते अपक्षीयते विनश्यतीति षड्विकारवदेतत्स्थूलशरीरम् ।

பஞ்சீகரணம் செய்யப்பட்ட ஐந்து மகாபூதங்களால் செய்யப்பட்டது, நல்ல கர்மத்தின் பயனால் உண்டானதும், இன்பம்-துன்பம் முதலிய அனுபவங்களை அடைய பாத்திரம் ஆவது சரீரம். இது, இருத்தல், தோற்றமடைதல், வளர்ச்சியடைதல், மாற்றமடைதல், தேய்வடைதல் மற்றும் அழிவடைதல் ஆகிய ஆறு வகையான மாற்றமடைவது இந்த ஸ்தூல சரீரம்.

**விசாரம்**

பஞ்சீகரணம் என்றால் என்ன என்று விளக்கமாக பின்னர் காண்போம். இங்கு காணவேண்டியது ஐந்து வகை மகாபூதங்களால் ஆனது என்பது, அதாவது ஆகாயம், வாயு, நெருப்பு, நீர் மற்றும் நிலம் ஆகும். நல்ல கர்மத்தின் பயன் என்று கூறப்பட்டது, அதாவது நாம் செய்த புண்ணிய - பாவ கர்மங்களின் பயன் என்று அறியவேண்டும், காரணம், இந்த ஸ்தூல சரீரமாவது மீண்டும் மூன்றுவகையாக பிரிக்கப்படுகின்றது, நல்ல கர்மத்தினால், தீய கர்மத்தினால் மற்றும் நல்ல-தீய கர்மத்தினால் உண்டாவது என்று, அதாவது நல்ல கர்மத்தினால் நமக்கு தேவதை நிலையான சரீரம் கிடைக்கும், அது இன்பத்தினை அனுபவிக்க மட்டும் காரணமாகின்றது. தீய கர்மத்தினால் நரக லோகத்தில் பிறப்பது உண்டாகின்றது, அல்லது ஊர்வண பறப்பன முதலிய சரீரம் அடைவது உண்டாகின்றது. நல்ல மற்றும் தீய கர்மத்தினால் மனிதப்பிறவியானது கிடைக்கின்றது. மேல் லோகமும், கீழ்லோகமும் அனுபவத்தினை அடைவதானதாக மட்டும் இருப்பதான சரீரம் அதாவது நாம் புதியதாக ஒரு கர்மத்தினை ஈட்டமுடியாது. இந்த மனிதப்பிறவியே நல்ல-கெட்ட கர்மத்தினை அடைய/உண்டாக்க தகுதியுடையதான சரீரம். அதனால்தான் ஔவயார் பாட்டி **அறிதறிது மானிடராய் பிறத்தலறிது** என்றும், பகவான் பாஷ்யகாரர் **மனுஷ்யத்வம் முமுக்ஷுத்வம் மஹாபுருஷ சம்ஷ்ரய** என்று தன்னுடைய விவேகசூடாமனியில் கூறியிருக்கின்றார். இந்த ஸ்தூல சரீரமானதினை குறித்து ஸ்ரீ யாஸ்கர் தன்னுடைய நிகண்டுவினில் கூறியிருக்கும் ஆறு பாவவிகாரங்கள் (மாற்றங்கள்) இங்கு கூறப்பட்டது.

இந்த ஆறு வகையான மாற்றங்களை அடைய சரீரம் வேண்டும், அந்த உடலானது நான்கு வகைப்பிறப்புக்களாக ஆகமுடியும். கருவிலிருந்து, முட்டையிலிந்து, வேர்வையிலிருந்து மற்றும் முலையிலிருந்து என்றும்.

இந்தவகை ஜகத்தானது ஐந்துவகையானதாக அஸ்தி, பாத்தி, பிரியம், நாமம் மற்றும் ரூபம் என்று இருக்கின்றது, அதாவது, இருத்தல், பிரகாசித்தல், இன்பம், பெயர் மற்றும் உருவம் என்று இதனில் முதல் இரண்டும் பிரமத்தின் இயல்பு, கடைசி இரண்டும் ஜகத்தின் இயல்பு.

இங்கு இந்த ஜகத்தில் அடையப்படும் பலனும் ஐந்து வகைப்படும் உத்பத்தி, ஆப்தி, விகாரம், சம்ஸ்காரம் மற்றும் நாஷம் அதாவது, தோன்றுதலால், அடைதலால், மாறுதலால், சம்ஸ்காரமடைதலால் மற்றும் அழிதலால்.

யோகத்தில் இந்த உடலை கோவில் என்று குறிப்பிடுகின்றனர், காரணம், சுவரிருந்தால்தான் சித்திரம் என்பது போல **ஷரீரம் வை கலு தர்மசாதனம்**

இந்த உடலிருந்தால்தான் சாதனையானது இயலும் என்பதால். திருமூலரும் திருமந்திரத்தில் **உடலை முன்னர் இழுக்கென்றிருந்தேன்** என்று இந்த உடலில் உருபொருள் கண்டதால் உடலை பேனுகின்றேன் (ஓம்புகின்றேன்) என்று கூறுகின்றார்.

இந்த சிருஷ்டியானது விவர்தமாக உண்டானது என்பது வேதாந்த சித்தாந்தம், அதாவது பால் தயிராக ஆதல் பாிணாமம், கயரு பாம்பாக தோன்றுதல் விவர்த்தம். ஆனாலும், ஒரு விஷயம் நினைவில் கொள்ளவேண்டும், சைதன்யத்தின் நிலையிலிருந்து இது விவர்த்தமாகவும்,அஞ்ஞானத்தின் நிலையிலிருந்து பாிணாமமாகவும் என்று.

## सूक्ष्मशरीरं किम् ?

சூக்கும சாீரம் என்பதென்ன.

**விசாரம்**

ஸ்தூல சாீரம் குறித்த விசாரம் செய்தபின்னா் முறையே சூக்கும சாீரத்தினை குறித்த விசாரமானது செய்யப்ப்படுகின்றது.

**अपञ्चीकृतपञ्चमहाभूतैः कृतं सत्कर्मजन्यं सुखदुःखादिभोगसाधनं पञ्चज्ञानेन्द्रियाणि पञ्चकर्मेन्द्रियाणि पञ्चप्राणादयः मनश्चैकं बुद्धिश्चैका एवं सप्तदशाकलाभिः सह यत्तिष्ठति तत्सूक्ष्मशरीरम् ।**

பஞ்சீகரணம் செய்யப்படாத ஐந்து மகாபூதங்களால் செய்யப்பட்டது, நல்ல கா்மத்தினால் உண்டானதும், இன்பம்-துன்பம் முதலிய அனுபவங்களை அடைய கருவியாகும், ஐந்து ஞானேந்திாியம் (அறிவுப்புலன்கள்), ஐந்து கா்மேந்திாியங்கள் (செயற்புலங்கள்), ஐந்து பிராணங்கள், ஒரு மனது, ஒரு புத்தி என்று பதினேழு கலைகளுடன் கூடியதாக எது இருக்கின்றதோ அது சூக்கும சாீரம் எனப்படுகின்றது.

**விசாரம்**

இங்கு விளக்கப்படாத ஞானேந்திாியம், கா்மேந்திாியம், பிராணன் முதலியவை மூலத்திலேயே விளக்கப்படும்.

**श्रोत्रं त्वक् चक्षुः रसना घ्राणम् इति पञ्च ज्ञानेन्द्रियाणि ।**

காது, தோல், கண், நாக்கு, மூக்கு என்று ஐந்து ஞானேந்திரியம்.

**விசாரம்**

ஞானம் என்றால் அறிவு, இங்கு ஷப்தம் முதலிய விஷயங்கள் இதன் மூலம் அறியப்படுவதால் இது அறிவுக்கருவி என்று கூறப்படுகின்றது. இனி இவை ஒவ்வொன்றிர்க்கும் தேவதை மற்றும் விஷயமானது கூறப்படுகின்றது.

**श्रित्रस्य दिग्देवता । त्वचो वायुः । चक्षुषः सूर्यः । रसनाया वरुणः । घ्राणस्य अश्विनौ ।**

**इति ज्ञानेन्द्रियदेवताः ।**

காதிற்கு திசைகள் தேவதை.

தோலிற்கு வாயு.

கண்களுக்கு சூரியன்.

நாவிற்கு வருணன்.

மூக்கிற்கு அஷ்வினி குமாரர்கள்.

என்று ஞானேந்திரியத்தின் தேவதைகள்.

**விசாரம்**

அஷ்வினி குமாரர்கள் இருவர் என்பதால், இங்கு அஷ்வினௌ என்று இருமையில் குறிப்பிடப்பட்டது.

ஒவ்வொரு விஷயமும் இங்கு அதன் அதிஷ்டான தேவதை கொண்டு அறியப்படுவதால், நாம் மற்றவரை தெறியாமல் மிதித்துவிட்டால் தொட்டு கும்பிடுவது இதனாலேயே, அந்த சரீரத்தில் உள்ள அதிஷ்டான தேவதையின் காரணத்தினால் அது சக்திபெருகின்றது என்பது அறியலாம். இதனால் நாம், சனாதன தர்மிகள் (இந்து மதத்தினர் அல்ல, அவ்வாறு நம்மை

கூறிக்கொள்வது தவறு) மரங்களையும், கற்களையும் கும்பிடுபவர் என்ற வாதம் நிராகரிக்கப்படுகின்றது, அதாவது, அதனதன் அதிஷ்டான தேவதியினை நாம் வழிபடுபவர்கள் ஸ்தூல விஷயங்களை அல்ல என்பதால்.

**श्रोत्रस्य विषयः शब्दग्रहणम्। त्वचो विषयः स्पर्शग्रहणम्। चक्षुषो विषयः रूपग्रहणम्। रसनाया विषयः रसग्रहणम्। घ्राणस्य विषयः गन्धग्रहणम् इति।**

காதிற்கு விஷயம் ஒலியினை அடைதல்.

தோலிற்கு விஷயம் தொடு உணர்ச்சி.

கண்களுக்கு விஷயம் ரூபத்தினை (நிறத்தினை) அடைதல்.

நாக்கிற்கு விஷயம் சுவையினை அறிதல்.

மூக்கிற்கு விஷயம் மணத்தினை ஆறிதல் என்று.

**वाक्पाणिपादपायूपस्थानीति पञ्चकर्मेन्द्रियाणि।**

வாய், கை, கால், குதம், மூத்திர இந்திரியம் என ஐந்து செயற்ப்புலங்கள்.

**விசாரம்**

ஐந்து கர்மேந்திரியங்களும் அதன் தேவதைகளும் அதன் விஷயமும் கூறப்பட்ட பின்னர், முறையே கர்மேந்திரியம் குறுத்து கூற.

இந்த கர்மேந்திரியத்திற்கும் முறையே தேவதையினையும், தொழிலையும் கூற.

**वाचो देवता वह्निः। हस्तयोरिन्द्रः। पादयोर्विष्णुः। पायोर्मृत्युः। उपस्थस्य प्रजापतिः। इति कर्मेन्द्रियदेवताः।**

வாயிற்கு அக்னி தேவதை.

கைகளுக்கு இந்திரன்.

கால்களுக்கு விஷ்ணு.

குதத்திற்கு யமன்.

மூத்திர இந்திரியத்திற்கு பிரஜாபதி (பிரம்மா).

என்று செயற்புலங்களின் தேவதை.

**वाचो विषयः भाषणम्। पाण्योर्विषयः वस्तुग्रहणम्। पादयोर्विषयः गमनम्। पायोर्विषयः मलत्यागः। उपस्थस्य विषयः आनन्द इति।**

வாயின் தொழில் பேசுதல்.

கைகளுக்கு தொழில் பொருளினை கிரகித்தல்.

கால்களுக்கு தொழில் செல்கை.

குததிற்கு தொழில் மலத்தை நீக்குதல்.

மூத்திர இந்திரியத்திர்க்கு தொழில் இன்பம் அடைதல் என்று.

விசாரம்
ஸ்தூல மற்றும் சூக்கும சரீரம் விளக்கப்பட்ட பின்னர் காரண சரீரமானது கூறப்படுகின்றது.

**कारणशरीरं किम्?**
காரண சரீரம் என்பதென்ன.

**अनिर्वाच्यानाद्यविद्यारूपं शरीरद्वयस्य कारणमात्रं सत्स्वरूपाऽज्ञानं निर्विकल्पकरूपं यदस्ति**

## तत्कारणशरीरम् ।

கூறப்பட இயலாதது துவக்கமில்லாதது அவித்தை வடிவானது இரு சரீரங்களுக்கும் (ஸ்தூல, சூக்கும) காரணமாகவும் இருந்து, தன்னுடைய உண்மையினை அறியாததும் வேற்றுமயற்றவடிவானதும் எது இருக்கின்றதோ அது காரண சரீரம்.

**விசாரம்**

அனிர்வசனீயம் என்றால் நிர்வசனம் - கூறுவது, ந நிர்வசனீயம் - இல்லை கூறுவது, அதாவது இப்படிப்பட்டது என்று இதனை கூறுவது இயலாதது. எல்லா விஷயமும் ஒரு குறிப்பு உடையதாக இருக்கின்றது ஆனால் இந்த காரண சரீரம் இப்படிப்பட்டது என்ற குறிப்பற்றது. சரி, ஆனால் இது உடலானதால் இது துவக்கமுடையதாக இருத்தல் ஆகும் என்றால், தவறு, இது அனாதி, அதாவது, எதற்க்கு ஆதி - துவக்கம், இல்லையோ அது அனாதி, துவக்கமற்றது. இவ்வாறு குறிப்பு இல்லாததும் துவக்கமற்றது என்ற நிலை இருக்க முடியாது என்றால், அதனால் தான் இது அவித்தை வடிவானது, ந வித்யா அவித்யா அதாவது அறியாமை,கயாரில் தோன்றும் பாம்பு, எப்படிப்பட்டது என்றும் எப்பொழுது தோன்றியது என்றும் கூற இயலாதது போல, இதுவும். அப்படியென்றால் இதனை ஏற்க்க எந்த பிரயோஜனமும் இல்லை, என்றால், தவறு, இதுவே மற்ற இரண்டு சரீரத்திற்க்கும் காரணமாக இருப்பது. அப்படியானதால் இது தன்னைபற்றி அறிவதானதாக இருக்கும் என்றால், தவறு, அவித்தை வடிவானது என்பதால், இது உண்மையினை அறியாதது ஆகின்றது.

அடுத்து மூவகை சரிரமும் விளக்கப்பட்ட பின்னர், முறையே மூவகை அவஸ்தைகள் (நிலைகள்) குறித்து விளக்க.

## अवस्थात्रयं किम् ?

அவஸ்தாத்ரயம் என்பதென்ன.

**விசாரம்**

அவஸ்தா - நிலை , த்ரயம் - மூன்று, மூன்று நிலைகள் என்றாகிறது.

## जाग्रत्स्वप्नसुषुप्त्यवस्थाः ।

விழிப்பு, கனவு, தூக்கம் மூன்று நிலைகள்.

**விசாரம்**

ஜாக்ரத் - விழிப்பு நிலை, ஸ்வப்னம் - கனவு நிலை மற்றும் சுஷுப்தி - தூக்க நிலை. இந்த மூன்று நிலைகளினை குறித்த விசாரமானது மிகவும் அவசியமாகின்றது, காரணம், நம்முடைய இந்த விழிப்பு நிலையானது மிகவும் உண்மைபோல தோற்றமளிப்பதால் இதனை நாம் கானல் நீர் போன்றது என்று நிராகரிப்பது இயலாதது ஆகின்றதால், கனவிலும் இப்படியே, அதாவது, அங்கு காணும் விஷயங்கள் எல்லாம் உண்மை போல தோன்றினாலும் அது விழிப்பில் பொய் என்று விளங்குவது போல, இந்த விழிப்பு நிலை சத்தியமும் உண்மையல்ல என்று நம்முடைய உண்மையான விழிப்பான உண்மை நிலை அறிதலான ஞானத்தில் விளங்கும். பின்னர் தூக்கத்திற்கு என்ன அவசியம் என்றால், மீண்டும், எவ்வாறு தூக்க நிலையில் இந்த விழிப்பு நிலை உலகமானது இருப்பதில்லையோ அவ்வாறு உண்மை விழிப்பிலும் இது இல்லாமல் போகின்றது என்று விளக்கவே.

அந்த உண்மை நிலை என்ன என்றால், இந்த மூன்று நிலைகளிலும் எது மாறாமல் இருக்கின்றதோ அப்படிப்பட்ட சாக்ஷியே என்று பின்னர் காண்போம்.

**जाग्रदवस्था का ?**

விழிப்பு நிலை என்பதென்ன.

**விசாரம்**

இந்த விசாரத்தின் அவசியம் முன்னரே கூறப்பட்டது என்றாலும், இங்கு நமக்கு சில சந்தேகங்கள் எழ வாய்ப்புள்ளது, அதாவது விழிப்பு நிலையும் கனவு நிலையும் எவ்வாறு ஒன்றாக இருக்க இயலும் என்று, காரணம் கனவில் பொதுவாக நாம் காணும் பொருட்கள் மீண்டும் நாம் காண்பதில்லை ஆனால் விழிப்பு நிலையிலோ அதுவே மிண்டும் மிண்டும் காணப்படுகின்றது என்பதால், இதற்க்கு பதில், இங்கு வேதாந்தத்தில் மூன்று வகையான சத்தியம் ஏற்க்கப்படுகின்றது, **பாரமார்த்திகம், வியாவஹாரிகம் மற்றும் பிராதிபாசிகம்** என்று.

**பாரமார்திகமாவது** மெய்ப்பொருள், முக்காலத்திலும் மாறாதது, அது பிரம்மம் மட்டுமே.
**வியாவஹாரிகமாவது** இந்த உலகம் முதலியவை, இது உண்மையில் இல்லாதது ஆனாலும் நம்முடைய பூர்வ பிறவியின் எண்ணப்பதிவுகளினால் (சம்ஸ்காரத்தினால்) நமக்கு இருப்பது போல தோன்றுகின்றது. இது பிரம்ம ஞானம் உண்டாவது வரையில் உண்மையானது, பிரம்மஞானத்திற்க்கு பறகே இதனை நாம் நிராகரித்தல் இயலும்.
**ப்ராதிபாசிகமாவது** முக்காலத்திலும் இல்லாதது ஆனால் இருப்பது போன்ற தோற்றத்தினை உண்டாக்குவது, கானல் நீர் அல்லது கயரில் பாம்பு அல்லது சிப்பியில் வெள்ளி.

இதனால், நம்முடைய இந்த ஜகத்தானது வியாவஹாரிக உண்மையானதால் இது பிரம்மஞானத்திற்க்கு பிறகே நீங்குவதாக இருப்பதால், நீங்கும் என்ற நிலை நிச்சயமாவதால் இதனை கனவு போல என்று கூறுவதற்க்கு இந்த விசாரம் அவசியமாகின்றது.

**श्रोत्रादिज्ञानेन्द्रियैः शब्दादिविषयैश्च ज्ञायते इति यत् सा जाग्रदावस्था। स्थूल शरीराभिमानी आत्मा विश्व इत्युच्यते।**

காது முதலிய ஞானேந்திரியங்கள், ஒலி முதலிய விஷயங்களை அறிகின்றது என்று எந்த நிலையோ அது விழிப்பு நிலை. ஸ்தூல சரீரத்தின் அபிமானி (தான் என்ற என்னமுடையது) ஆத்மவானது விஷ்வன் என்று கூறப்படுகின்றது.

**விசாரம்**

தார்கிகர்கள் மத கொள்கையின்படி **இந்திரியார்த சன்னிகர்ஷ ஜன்யம் ஞானம் ப்ரத்யக்ஷம்** அதாவது இந்திரியம் மற்றும் விஷயத்தின் சேர்க்கையினால் உண்டாகும் அறிவிற்க்கு பெயர் பிரத்யக்ஷம் ஆகும், அப்படி இங்கு அந்த அறிவு உண்டாகும் நிலைக்கு பெயர் ஜாக்ரத் எனப்படும் விழிப்பு நிலை ஆகும்.

இங்கு இந்த விஷ்வனின் இடம் செயல் முதலியவை விசாரம் செய்யப்படுகின்றது - இது இருக்கும் இடம் வலது கண், ஸ்தூலமானதினை

அனுபவிக்கின்றது, காரணத்தினாலும் காரியத்தினாலும் கட்டுப்படுத்தப்பட்டது, த்வைதம் அறியப்படுவகிறது, அறிவு, ஓம்காரத்தில் அகாரம்.

**स्वप्नावस्था केति चेत् जाग्रदवस्थायां यद्दृष्टं यद् श्रुतम् तज्जनितवासनया निद्रासमये यः प्रपञ्चः प्रतीयते सा स्वप्नावस्था। सूक्ष्मशरीराभिमानी आत्मा तैजस इत्युच्यते।**

கனவு நிலை என்னவென்றால்.

விழிப்பு நிலையில் எது பார்க்கப்பட்டதோ எது கேட்கப்பட்டதோ அதனால் உண்டாகும் எண்ணப்பதிவுகளால் தூகக நிலையில் எந்த உலகமானது தோன்றுகின்றதோ அது கனவு நிலை. சூக்கும சரீர அபிமானியான ஆத்மாவானது தைஜசன் என்று கூறப்படுகின்றது.

**விசாரம்**

உண்மையில் கனவு நிலையானது விழிப்பு நிலையில் பார்க்கப்பட்டதும் கேட்க்கப்பட்டதுமே அறியப்படுகின்றது, ஆனால், நாம் இதற்கு முன்னர் காணாத கேட்க்காத பல விஷயங்களும் கூட அறியப்படுவது உண்டு என்றால், அதற்க்கு பதில், இந்த பிறவியில் அல்லாதது போன பிறவியிலுமோ, அல்லது பார்க்கப்பட்ட விஷயங்களின் சேர்க்கையினால் கொம்புடைய முயல், மனிதன் போன்றவை ஆகின்றது என்று அறியவேண்டும்.

இங்கு இந்த தைஜசனின் இடம் செயல் முதலியவை விசாரம் செய்யப்படுகின்றது - இது இருக்கும் இடம் மனதினுள், சூக்குமமானதினை அனுபவிக்கின்றது, காரணத்தினாலும் காரியத்தினாலும் கட்டுப்படுத்தப்பட்டது, த்வைதம் அறியப்படுகிறது, தவறான அறிவு, ஓம்காரத்தில் உகாரம்.

**अतः सुषुप्तवस्था का ?**

**अहं किमपि न जानामि सुखेन मया निद्राऽनुभूयत इति सुषुप्त्यवस्था। कारणशरीराभिमानी आत्मा प्राज्ञ इत्युच्यते।**

அதன்பின்னர் தூக்க நிலயானது என்ன.

நான் ஒன்றும் அறிவேனில்லை, இன்பமாக என்னால் தூக்கமானது அனுபவிக்கப்படுகின்றது என்பது தூக்க நிலை. காரண சரீர அபிமானியான ஆத்மாவானது பிராஞ்ஞன் என்று கூறப்படுகின்றது.

**விசாரம்**

இந்த தூக்க நிலையானது அறியாமை என்று அறியப்படுகின்றது, அதாவது எவ்வாறு கங்கை நீரானது குடத்தில் இட்டு மூடப்பட்டு கடலில் இடப்பட்டால் அது வெளியில் எடுக்கும் போதும் மாற்மற்றதாகவே இருக்குமோ அவ்வாறு, ஆனால் ஞான நிலையானது மூடியானது திறந்து இருக்கும்போது கடலில் இறக்கப்பட்டால் எவ்வாறு அந்த குடத்தின் நீரானது கடல் நீரானது ஆகின்றதோ அவ்வாறு என்பது வேறுபாடு.

இங்கு இந்த பிராஞ்ஞனின் இடம் செயல் முதலியவை விசாரம் செய்யப்படுகின்றது - இது இருக்கும் இடம் இதயத்திலுள்ள ஆகாயத்தில், ஆனந்தத்தினை அனுபவிக்கின்றது, காரணத்தினால் மட்டும் கட்டுப்படுத்தப்பட்டது, த்வைதம் அறியப்படுவதில்லை, அறியாமை, ஒம்காரத்தில் மகாரம்.

அடுத்து முறையாக பஞ்சமயகோஷமானது - ஐந்துவகையான உறைகள் , விசாரம் செய்யப்படுகின்றது. எவ்வாறு ஒரு உறையானது போர்த்தியிருக்கும் விஷயத்தினை முழுவதும் மறைக்கின்றதோ அவ்வாறு இந்த ஐந்து கோஷங்களும் ஆத்மாவினை மறைக்கின்றது.

**पञ्च कोशाः के ?**


**अन्नमयः प्राणमयः मनोमयः विज्ञानमयः आनन्दमयश्चेति ।**

ஐந்து உறைகள் யாவை.

அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம் மற்றும் ஆனந்தமயம் என்றும்

**விசாரம்**

இங்கு மயம் என்பது சமஸ்கிருதத்தில் வரும் மயட் என்ற விகுதி ஆகும், இது **பிராசுர்யார்தே மயட்** என்ற சூத்திரத்தினால் அதிகமாக என்ற பொருளில் உபயோகப்படுத்தப்படுகின்றது. அவ்வாரு அன்னம் முதல் ஆனந்தம் வரை எல்லாம் அதிகமாக உள்ள நிலை என்று அறியவேண்டும், இவ்வாறு விளக்க காரணம், ஆனந்தம் பிரம்மத்தின் ஸ்வரூபமாக இருப்பதால் இந்த ஆனந்தமயக்கோஷத்தினை நாம் பிரம்ம நிலையாக கறுத வாய்ப்பு உள்ளது, ஆனால் இந்த ஆனந்தமயமும் ஒரு உறையானதால், அது மற்ற உறைகளைப்போல காணப்படுவதாலும் இது பிரம்ம நிலை இல்லை என்பது அறிவு.




ஒவ்வொறு கோஷமாக (உறையாக) இங்கு காணலாம்.

**अन्नमयः कः ?**

அன்னமயம் (கோஷம்) என்ன.

<u>விசாரம்</u>

ஆத்மாவினை வெளியிலிருந்து மறைக்கும் கடைசி போர்வையான அன்னமயம் முதலில் விசாரிக்கப்படுகின்றது.

**अन्नरसेनैव भूत्वा अन्नरसेनैव वृद्धिं प्राप्य अन्नरूपपृथिव्यां यद्विलीयते तदन्नमयः कोशः स्थूलशरीरम्।**

அன்னத்தின் ரசத்தினாலேயே உண்டாகி அன்னரசத்தினாலேயே வளர்ச்சியினை அடைந்து அன்னரூபமான பூமியில் எது ஒடுங்குகின்றதோ அது அன்னமயமான மறைப்பு (உறை), இந்த ஸ்தூல சரீரம்.

**விசாரம்**

சாதகர்கள் இந்த கோஷத்தினை நன்றாக அறிந்துகொள்ளவேண்டும், காரணம், இது மிகவும் சாதாரணமாக இருப்பது போல தோன்றினாலும் இந்த உறையானது நீக்குவது மிகவும் அறிதானது. நம்முடைய பல முற்பிறவிகளின் எண்ணப்பதிவுகளானது மிகவும் திடமாக இருப்பதால், நான் இந்த உடம்பு என்று. அதுமட்டுமல்லஆது, இதனை நீக்குவதால், இந்த உலகமானது முழுவதும் மித்யை என்ற நிச்சயமானது உண்டாகிவிடும், காரணம் இந்த உலகமே அன்னத்திற்க்கு காரணமாக இருப்பதால், தைத்திரீயத்திலும், **ப்ருத்வ்யாம் ஒஷதீப்ய ஒஷதீப்யோ அன்னம்** என்றும்.

இன்னொரு விசாரமும், இந்த அன்னமய கோஷத்திலேயே மற்ற கோஷங்களும் இருப்பதால், இந்த கோஷத்தினை நீக்குவதால் அதன் இருப்பிடமானது, ஆதாரமானது நீங்குகின்றதால், இதனை நீக்கினால் மற்றவையினை நீக்குவது சுலபமாக ஆகும். அன்னம் என்று மீண்டும் மீண்டும் உபயோகிக்க காரணம், **அத்தி தே ச பூதானி தஸ்மாத் அன்னம் ததுச்யத இதி** என்று க்கூறப்பட்டதால், பூதங்களை இதுவும், இதனை பூதங்களும் உண்பதால் இது அன்னம் என்று கூறப்படுகின்றது.

இந்த கோஷத்தினை நீக்க ஒரு த்யான / விசார முறை. அதாவது இந்த உடலை ஒரு பெரிய பூதகண்ணாடியின் வழியாக பார்த்தால், பூதாகாரமாக ஆக்கி பார்த்தால், இந்த உடல் முழுவதும் விஞ்ஞானிகள் கூறுவது போல பாக்டீரியா, வைரஸ், ஆடம் (அனு), செல் என்று இவையே கூடியதாக இருக்கும், இந்த சின்ன சின்ன ஜீவன்களே ஒன்று சேர்ந்து நமக்கு, நான் பார்க்கின்றேன் , நான் கேட்க்கின்றேன் முதலிய அறிவினை தருகின்றது,

என்பதால், உண்மையில் பார்ப்பது கேட்ப்பது முதலிய செயல்களை இந்த அனுக்களே செய்தாலும், மீண்டும் இவை பார்க்க கேட்க தகுதி இல்லாத ஜடம் என்பதால், நாம் செய்வது போல ஒரு பிரமையினை உண்டு செய்கின்றது.

**प्राणमयः कः ?**

**प्राणाद्याः पञ्चवायवः वागादीन्द्रियपचकं प्राणमयः कोशः ।**

பிராணமய (கோஷம்) என்பதென்ன.

பிராணன் முதலிய ஐந்து வாயுவும் வாய் முதலிய ஐந்து கர்மேந்திரியமும் சேர்ந்து பிராணமயகோஷம் ஆகும்.

**விசாரம்**

பிராணன் முதலிய ஐந்து வாயுக்களாவது - பிராணன், அபானன், வியானன், சமானன் மற்றும் உதானன் ஆகியவை. வாய் மற்றும் மூகின் வழியாக உள்ளேருவதும் வெளியேருவதுமான வாயு பிராணன், நீர் மற்றும் அருந்திய உணவினை கீழே கொண்டு செல்வது அபானன், உண்ட உணவின் சாரத்தினை வயிற்றிலிருந்து கொண்டு செல்வது சமானன், உணவு முதலியதை மேலே கொண்டு செல்லும் வாயுவானது உதானன் மற்றும் நாடியில் நின்று ரத்தம் முதலியது எல்லா இடத்திற்க்கும் பரவ காரணமாவது, நாடியினை விரித்து கொடுப்பது வியானன்.

ஐந்து கர்மேந்திரியங்களினை குறித்து முன்பே கூறப்பட்டது.

**मनोमयः कोशः कः ?**

**मनश्च ज्ञानेन्द्रियपञ्चकं मिलित्वा यो भवति स मनोमयः कोशः ।**

மனோமயம் (கோஷம்) என்பதென்ன.

மனதும் ஞானேந்திரியம் ஐந்தும் சேர்ந்து என்ன ஆகின்றதோ, அது மனோமய கோஷமாகும்.

**விசாரம்**

பிராணமயத்தின் உள்ளில் இருந்தாலும் மனதானது பிராணன் கட்டுப்பட்டால் கட்டுப்படுவது காணப்படுகின்றது, இதற்க்கு காரணம் இரண்டும் ஒரே இடத்திலிருந்து தோன்றுவதால் என்று கூறப்படுகின்றது.
இங்கு சாதரணமாக ஒரு வேதாந்த சூக்கும விஷயமானது கூறப்பட்டுள்ளது, அதாவது மனது இந்திரியம் இல்லை என்பது. மற்ற சித்தாந்த்தினில் மனதினை இந்திரியம் என்று ஏற்கின்றனர் ஆனால் வேதாந்ததினில் அல்ல.**மனஸ்ஷஷ்டாணி இண்திரியானி** என்று பகவத் கீதையினில் கூறியிருப்பது மனதினை இந்திரியமாக பிரமாணம் ஆகும் என்றால், தவறு, **யஜமான: பன்சமா இடா பக்ஷ்யா** என்று வேதத்தில் இடா என்ற ஹவிர்பாகத்தினை உண்ண தகுதி ரித்விக்குகளுக்கு மட்டும் என்று கூறினாலும் ரித்விக்கல்லாத யஜமானனையும் அதனை உண்ண கூறியிருப்பது போல, அல்லது, மஹபாரதமான ஐந்தாவது வேதத்தினை வேதம் படித்ததும் படிக்கவேண்டும் என்று வேதமாகாத மஹாபாரத்தினை வேதமாக கூறியிருப்பது போல. (வேதமென்றால் **அபொருஷேய வாக்யம்** அதாவது மனித்னால் எழுதப்படாத வாக்கியம், மஹாபாரதமானது வியாசரால் எழுதப்பட்டது என்று தெறிந்ததே).

**இந்திரியேப்ய பரா ஹி அர்த்தா அர்தேப்ய பரம் மன** அதாவது புலங்களை கட்டிலும் மேலானது விஷயம், விஷய்த்தினை கட்டிலும் மேலானது மனது, என்ற வேத வாக்கியமும் இதனையே நிரூபிக்கின்றது.

அந்தக்கரணத்தின் நான்கு பிரிவுகளான மனது, புத்தி, சித்தம் மற்றும் அஹங்காரம் ஆகும், இதனில் மனதின் செயல் சந்தேகிப்பது, புத்தியின் செயல் தீர்மானிப்பது, சித்தத்தின் செயல் பதிவுசெய்வது அஹங்காரமானது நான் என்ற என்னத்தினை தருவது.

மனதினைகட்டுப்படுத்த பிராணன் தானாகவே நியந்திரிக்கப்பட்டதாக ஆகின்றது காணப்படுகின்றது. மனது பிராணனை கட்டிலும் உள்ளிருக்கும் உறை என்பது தெளிவாக தெறிகின்றது.

**विज्ञानमयः कः** ?

**बुद्धिज्ञानेन्द्रियपञ्चकं मिलित्वा यो भवति स विज्ञानमयः कोशः।**

விஞ்ஞானமயம் (கோஷம்) என்பதென்ன.

புத்தியும் ஞானேந்திரியம் ஐந்தும் சேர்ந்து என்ன ஆகின்றதோ, அது விஞ்ஞானமய கோஷமாகும்.

**விசாரம்**

விஞ்ஞான்ம் என்றால் அறிவு. இங்கு இதற்க்கு முன்னாலுள்ள கோஷமான மனோமயமானது இந்த அறிவினால் கட்டுப்படுத்தப்படுகின்றது என்பது எல்லோரு அறிந்த விஷயமே.அதனால் இந்த விஞ்ஞானமயமானது மனோமயத்திற்க்கும் உள்ளே இருப்பது என்பது அறியப்படுகின்றது.

விஞ்ஞானமயமான கோஷமே முடிவு என்று சில பௌத்திகர்களும், பூர்வமீமாம்சை வாதிகளும் சிந்திக்கின்றனர். ஆனால் இந்த அறிவும் அடங்கியிருக்கும் நிலையானது எல்லோருக்கும் தூக்கம் மற்றும் மயக்கம் முதலிய நிலைகளில் அனுபவமாகின்றது, ஆதலால் இதுவும் முடிவான மறைப்பாக இருக இயலாத நிலை உண்டாகும்பொழுது.

**आनन्दमयः कः ?**

**एवमेव कारणशरीरभूताविद्यास्थमलिनसत्त्वं प्रियादिवृत्तिसहितं सत् आनन्दमयः कोशः।**

**एतत्कोशपञ्चकम्।**

ஆனந்தமயம் (கோஷம்) என்பதென்ன.

இப்படியே காரண சரீரத்தின் அவித்தையிலுள்ள களங்கிய சத்துவமானது பிரியம் முதலிய எண்ணாலைகள் கூடியதானபோது ஆனந்தமய கோஷம்.

**விசாரம்**

இங்கு காரண சரீரத்தின் அவித்தையிலுள்ள களங்கிய சத்துவம் என்பது மிகவும் முக்கியமான விஷயம், காரணம், தூய சத்துவமான நிலையில் அதுவே சாக்ஷியான ஆத்மாவாக இருக்கின்றது. இங்கு பிரியம் முதலான என்றால், பிரியம், மோதம் மற்றும் பிரமோதம் ஆகும். அதாவது பிரியம், நாம் ஒரு விஷயத்தினை கண்டபொழுது உண்டாகும் இதனை அடையவேண்டும் என்ற ஆசை ஆகும். மோதமானது நாம் அதனை அடைந்த நிலையில் உண்டாகும் எண்ண அலை. அதுபோல,

பிரமோதமானது, நாம் அடைந்த விஷயத்தினை அனுபவிக்கும் போது உண்டாகும் எண்ணாலை ஆகும்.

இந்த வகையான விசாரமானது தைதிரீய உபனிஷதில் கூறப்பட்டுள்ளது. அங்கு பிருகு எனும் ரிஷி தன்னுடைய தந்தையான வருணனிடம் ஆத்மவித்யையினை படிப்பிக்குமாறு கேட்க்கும் பொழுது இந்த வகையாக ஒவ்வொறு கோஷமாக நீக்கி தன்னுடைய ஆத்மாவினை அறிகின்றார். ஆனால் அதில் **ஆனந்தம் பிரம்மேதி வியஜானாத்** என்பது வரை வந்த பின்னர் அவர் ஞானத்தினை அடைந்ததாக கூறப்படுகின்றது. காரணம் அங்கு கோஷத்தினை கூறவில்லை **மயட்** என்ற விகுதி இல்லாததால் என்றரியவேண்டும்.

**मदीयं शरीरं मदीयाः प्राणाः मदीयं मनश्च मदीया बुद्धिर्मदीयं ज्ञानमिति स्वेनैव ज्ञायते तद्यथा मदीयत्वेन ज्ञातं कटककुण्डल गृहादिकं स्वस्माद्भिन्नंतथा पञ्चकोशादिकं स्वस्माद्भिन्नं मदीयत्वेन ज्ञातमात्मा न भवति ॥**

இதுவே ஐந்து கோஷங்கள் (உறைகள்).

என்னுடைய உடல், என்னுடைய பிராணன், என்னுடைய மனது, என்னுடைய புத்தி, என்னுடைய அஞ்ஞானம் என்று தன்னலேயே அறியப்படுகின்றது. அது எவ்வாறு என்றால், என்னுடையதாக அறியப்படும் வலையல், தோடு, வீடு முதலியவை தன்னிலிருந்து வேறானதோ, அவ்வாறே, ஐந்து கோஷங்களும் என்னுடையதாக அறியப்படுவதால், ஆத்மா ஆக இயலாது.

**விசாரம்**

அதாவது, நம்முடைய பலப்பிறவிகளால் உண்டான எண்ணப்பதிவுகளானது, சில விஷயங்களை நான் என்றும் எனது என்றும் இரண்டாகவும் உள்ள அறிவினை தருகின்றது. உதாரணத்திற்க்கு, நான் வெள்ளை, நான் கருப்பு, நான் பிராம்மணன் என்பதாக, அதுபோல என்னுடைய காது, நான் செவிடு, என்னுடைய உடம்பு, நான் உடம்பு முதலியதாகவும், அதுபோல என்னுடைய அறிவு, என்னுடைய மனது முதலியதாகவும். இதற்க்கு காரணம் நம்முடைய சம்ஸ்காரம் என்று முன்பே கூறப்பட்டது.அதுபோல வெளி விஷயங்களானது

என்றும் நான் என்று அறியப்படுவதில்லை, என்னுடைய பானை முதலியவைகளில்.

அப்படி என்னுடைய என்று அறியப்படுவதானது எல்லாம் விஷயாமாக ஆவதால், நான் ஆக முடியாது, அறியய்ப்படுவதால் அது மித்யா என்ற தர்க்கத்தினால். ஆத்மா என்றும் விஷயமாக அறியப்படுவது அல்லாததால், அது எல்லாவற்றினையும் அறிவதாக இருப்பதால். இந்த ஐந்து கோஷங்களையும் நான் இல்லை என்று நீக்க இயலும்.

சரி, இதனால் ஆத்மா அல்லாதது நீக்கப்பட்டாலும், ஆத்மாவானது என்ன என்று தெரியாத நிலையில்.

## आत्मा तर्हि कः ?

ஆத்மா, அப்படியென்றால் என்ன.

**விசாரம்**

அநாத்மாவினை நீக்கியப்பின்னர், அறிந்தப்பின்னர், நாம் பிரம்மஞானியாக ஆவது இயலாது என்று விவேகத்தினை விசாரிக்கும் பொழுது கூறப்பட்டது நினைவிருக்கலாம். நாம் தெரிந்துகொள்ளவேண்டிய ஆத்மாவினை, ஈஷ்வரனை அல்லது உண்மையினை குறித்து அறிந்துகொள்ளாமல் எத்துனை காலம் சாதனை, ஜபம், தவம் முதலியவை செய்தாலும் நாம் அதனை அடைய இயலாது, அது எப்பொழுதும் அடையப்பட்டதாக இருப்பதால், அறியாமையினை மட்டும் நீக்கவேண்டியதால்.

உதாரணத்திற்கு, ஒரு பரமார்த்த குருவின் பத்து சீடர்களும் அவர்களுடைய குரு இருக்கும் அடுத்த கரைக்கு செல்ல முடிவு செய்தனர், அவர்களில் ஒருவன் தலைவனாகவும் ஆனான். ஆற்றை கடக்கும்போது எவரேனும் கானாது போனால், குரு கோபித்துக்கொள்வார் என்பதால், ஆற்றில் இறங்கும் முன்னர் தங்களை பத்து பேர் என்று கணக்கிட்டுக்கொண்டான். ஆற்றில் இறங்கி அக்கரைக்கு சென்றதும் ஒவ்வொருவரையும் கணக்கிட்டு, தன்னை நீக்கி (ஒழித்து, என்னாமல்), மொத்தம் ஒன்பதுபேர் மட்டும் கரை ஏரியிருக்கின்றனர் என்று பரிதவித்தான், அழுதான். அப்பொழுது அந்த வழியாக வந்த அறிவுள்ள வழிப்போக்கர், அவர்களின் பிரச்சனையினை உணர்ந்து (இவரையே வேதந்தததில் குரு என்கின்றோம்), எல்லோரையும்

வரிசையாக நிருத்தி, அவர்களின் தலையில் குட்டி, அவர்களின் வரிசை என்னை கூற வைத்தார், அப்போது தாங்கள் பத்துபேரும் உள்ளதினை அறிந்த அவர்கள், தங்களுடைய சோகத்தினை விடுத்து சந்தோஷித்தனர், அதுபோல, நாம் நம்முடைய உண்மை நிலையினை அறிந்த மாத்திரத்திலேயே, நாம் தெளிவாக, தூய மனதுடையவாரானால், நம்முடைய உண்மை நிலையினை அறிவோம், நாம் ஆத்மா இந்த உடலும் அதனால் வரைப்பட்டவருமல்ல என்று.

## सच्चिदानन्दस्वरूपः।

சத் - சித் - ஆனந்த இயல்புடையது.

**விசாரம்**

வேதாந்தத்தில் ஸ்வரூபம் - இயல்பு என்று இந்த மூன்றும் ஏற்க்கப்படுகின்றது. காரணம், இது ஆத்மாவின் குணம் என்றால் ஆத்மா குணி (குணமுடையது) ஆவதால் அது த்வைதமானதாக ஆவது மட்டுமல்லாது அநித்தியமாகவும் ஆகும். இதுபோல விசேஷணம் முதலியதாகவும் எற்க்கமுடியாது.

சத் - இருத்தல், சித் - அறிவு மற்றும் ஆனந்தம் - ஆனந்தம் (வறையற்ற) இயல்பு உடையது என்று பொருள். இதனை பிரம்மத்தின் ஸ்வரூப லக்ஷணம் என்றும் கூறுவர். ஸ்வரூப - இயல்பு லக்ஷணம் -குறிப்பு, இயற்க்குறிப்பு.

## सत्किम् ?

## कालत्रयेऽपि तिष्ठतीति सत्।

சத் என்பதென்ன.

மூன்று காலத்திலும் இருத்தலுடையது என்பதால் சத்.

**விசாரம்**

முக்காலத்திலும் எது நிராகரிக்கப்பட இயாலாததாக இருக்கின்றதோ, அதுவே சத் (இருத்தல்). காரணம் இது எதனுடைய காரியமாகவும் இல்லாததால், **எத்யத் கிருதகம் தத்தத் அனித்யம்** என்ற தர்கத்திற்க்கு எற்ப காரியமானது எல்லாம் அநித்தியமாவதாலும். இதுவே எல்லாவற்றிக்கும் காரணமாக இருப்பதால்.

சாந்தோக்கியத்திலும் **சதேவ சோம்ய இதமக்ர ஆசித் ஏகமேவாத்விதீயம்** என்று இந்த பிரம்மமானது மாத்திரம் சிருஷ்டிக்கு முன்னர் இருந்தது, இரண்டற்றதாக என்று குறிப்பிடுகின்றது, கீதையிலும் **ஓம் தத் சத்** என்று இந்த மூன்றையும் பிரம்மத்தின் பெயராக கிருஷ்ணரும் கூறுகின்றார்.

**चित्किम्** ?

**ज्ञानस्वरूपः** ।

சித் என்பதென்ன.

ஞான ஸ்வரூபமானது.

**விசாரம்**

சித் - ஞானம் - அறிவு.

**आनन्दः कः** ?

**सुखस्वरूपः** ।

ஆனந்தம் என்பதென்ன.

இன்ப ஸ்வரூபமானது.

**விசாரம**

ஆனந்த - இன்ப இயல்புடையது, என்றால், இது எதனையும் சார்ந்ததான இன்பம் அல்ல என்றும், எல்லா இன்பமும் இதன் ஒரு பகுதியே என்றும் பொருள். அளவிலடங்காத ஆனந்தம் என்பாதாலேயே தைத்திரீயத்திலும் ஆனந்த மீமாம்சாவில் (விசாரம்) மனித ஆனந்தத்திலிருந்து துவங்கி அதற்க்கு மேலாக ஷ்ரோத்திரியனாகவும் ஆசைவயப்படாதவனாகவும் இருப்பவன் அதனைக்காட்டிலும் நூறு மடங்கு ஆனந்தத்தினை அனுபவிப்பவன் என்று கூறி கடைசியாக பிரம்மத்தின் ஆனந்தத்தில் முடிகின்றது.

அதுபோல, நாம் ஆசைப்படக்கூடியது என்று எதையதை நினைக்கின்றோமோ அவையெல்லாம் இந்த பிரம்மத்தின், தன்மேலுள்ள ஆசையினாலேயே, **ஆத்மனஸ்து காமாய சர்வம் ப்ரியம் பவதி** என்று உபனிஷதும் கூறுகின்றது.

## एवं सच्चिदानन्दस्वरूपं स्वात्मानं विजानीयात्।

இவ்வறு சத் - சித் - ஆனந்த ஸ்வரூபமான தன்னுடைய ஆத்மாவினை (தன்னை) அறிவீர்களாக.

**விசாரம்**

**அத்யாரோப அபவாதாப்யாம் நிஷ்பிரபன்சம் பிரபன்சதே** என்ற வேதாந்த முறைப்படி இங்கு இனி அத்யாரோபமான ஏற்றிப்பார்த்தலினை செய்து பின்னர் அபவாதாமான நிராகரித்தலை இங்கு காண்பிக்க, முதலில் அத்யாரோபமான சிருஷ்டி பிரகரணத்தை (சிருஷ்டியின் முறையினை) கூற.

## अथ चतुर्विंशतितत्त्वोत्पत्तिप्रकारं वक्ष्यामः।

அடுத்து, இருபத்திநான்கு தத்துவத்தின் தோற்றத்தின் வழியினை கூறுவோம்.

**விசாரம்**

இருபத்திநான்கு தத்துவங்களானது ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், நிலம் (5) , காது, தோல், கண், நாக்கு, மூக்கு (5) , மனது, புத்தி, சித்தம், அஹங்காரம் (4) , வாய், கை, கால், குதம், மூத்திர இந்திரியம் (5) , ஐந்து பிராணங்கள் (5)

## ब्रह्माश्रया सत्त्वरजस्तमोगुणात्मिका माया अस्ति।

பிரம்மத்தை சார்ந்திருப்பதாக சத்துவ, ரஜஸ் மற்றும் தமோ குணமான மாயா இருக்கின்றது.

**விசாரம்**

இந்த மாயயையானது எதனை சார்ந்திருப்பது என்ற விசாரம் வேதாந்த சித்தாந்த்தில் முக்கியமானது. அதனால் இந்த விசாரம், அதாவது அது

பிரம்மத்தையா ஜீவனையா, ஈஷ்வரனையா எதனை சார்ந்திருப்பது என்று. இங்கு சித்தாந்தமாக இது (மாயா) பிரம்மத்தினை சார்ந்திருப்பது என்று கூறப்படுகின்றது. காரணம், மாயா என்றால் சாதாரணமாக **யா மா ஸா மாயா** , எது இல்லையோ அது, என்று கூறுவர், அதாவது எது இல்லையோ அது மாயா என்று. ஆனால், உண்மையில் இதனை விவரிக்க இயலாது, அதனால், இதற்க்கு **அனிர்வசனீயமென்றும்** என்று ஒரு குறிப்பு உள்ளது. இது பிரம்மத்தினை சார்ந்தாக இருப்பதாக கூற காரணம், இந்த மாயாவானது உண்மையில் ஒரு கற்பனை விஷயமாக இந்திரஜாலம்போல இருப்பது போல தோற்றம் அளிப்பது, ஆனால் உன்மையில் இல்லை. இல்லாத விஷயமானது எங்கு காணப்படும் என்றால், அது அதிஷ்டானத்திலேயே என்று பதில், உதாரணத்திற்க்கு, இந்த பூமியில் பானையின்மை இருக்கின்றது என்று கூறினால், அந்த இன்மையினை காண்பது இயலாததால்.அங்கு பூமியினை மட்டுமே காண்பதால் அதிஷ்டானமே காணப்படுகின்றது என்பதால், மாயையின் இருப்பும் அதிஷ்டானமான பிரம்மத்திலேயே இருக்கும் என்று முடிவாகின்றது.

அவித்யா என்பது **யா ந வித்யதே ஸ** , எது இல்லையோ அது, என்ற குறிப்பினால் அதுவும் மாயாவும் வேறல்ல என்று நிரூபனமாகின்றது. இந்த அவித்தையானது இரண்டு வகைப்படும் மூலாவித்தை மற்றும் தூலாவித்தை என்றும். சுத்தசைதன்யதினை (பிரம்மத்தினை) மறைப்பது மூலாவித்தை ஆகும், பானை முதலியவை கூடிய சைதன்யத்தினை மறைப்பது தூலாவித்தை. மீண்டும், இந்த மூலாவித்தையானது காரணாவித்தை மற்றும் காரியாவித்தை என்று இரண்டு வகைப்படும், அதாவது ஆவரணம் மற்றும் விக்ஷேபமான சக்திகலுடன் கூடியதான அனாதி பாவரூபமான அவித்தை காரணாவித்தை என்றும், விஷயங்களினை வேறுபோல தோன்றசெய்கின்றது காரியாவித்தை என்றும் ஆகும்.

ஆனால் இங்கு மாயாவும் அவித்தையும் வேறல்ல என்று கூறியது அதன் செயல்களை குறித்தேயாகும், காரணம் மாயாவானது சுத்தசத்துவமும், அவித்தையானது மலினசத்துவமும் என்று வேறுபடுகின்றது. இதனை வேறுவேறானதாக ஏற்ப்பவரும் உண்டு, அதனால் என்ன என்ற விசாரம் பின்னர் ஜீவம்முக்தி விசாரத்தில் செய்யப்படும்.

**ततः आकाशः सम्भूतः ।**

அதனிலிருந்து ஆகாயம் தோன்றியது.

## விசாரம்

**அத்மன: ஆகாஷ சம்பூத** என்ற தைதிரீய ஷ்ருதியினால் இந்த ஆகாயமானது இந்த ஆத்மாவிலிருந்து தோனியது என்பதால், இங்கு மாயையிலிருந்து எவ்வாறு வேறுமாதிரி கூறப்படுகின்றது என்றால், இந்த சிருஷ்டியானது கற்பனையே என்று முன்பே கூறிவிட்டதால், இந்த மாயையே அதற்க்கு ஆதாரமாக இருப்பதால் என்று பதில். அதுமட்டுமல்லாது இந்த சிருஷ்டிக்கு சாமக்கிரியாக பொருளாக இந்த பிரம்மமே அபின்ன நிமித்த உபாதான காரணமாக இருப்பதால், அதாவது, வேறற்றதான பிரிவற்றதான நிமித்தம் மற்றும் உபாதான (சிருஷ்டிக்கு அவசியமான பொருள்) காரணமாக, எவ்வாறு பானை பிடிக்க நிமித்தமாக குயவன் இருக்கின்றானோ அதுபோல உபாதானமாக களிமண் இருக்கின்றதோ அதுபோல.

ஷப்தம், ஸ்பர்ஷம், ரூபம், ரசம் மற்றும் கந்தமானது இந்த பஞ்சபூதங்களின் குணங்களாகின்றது, அதனில் ஆகாயாமனது முதலாவதான ஷப்தம் மட்டும், வாயு ஷப்தம் மற்றும் ஸ்பர்ஷம், நெருப்பு ஷப்தம், ஸ்பர்ஷம் மற்றும் ரூபம், நீர் ஷப்தம், ஸ்பர்ஷம், ரூபம் மற்றும் ரசம், நிலம் ஐந்து குணங்களும் உடையது.

அதாவது **ஷப்தகுணகம் ஆகாஷம்** , அது நாம் செய்யும் ஷப்தங்களை பிரதிபளிக்கின்றது.

## आकाशाद् वायुः।

ஆகாயத்தினிலிருந்து வாயு (காற்று).

## விசாரம்

இங்கு பஞ்சீகரணமானது பேசப்படுவதால் ஆகாயத்தினிலிருந்து தொடங்கப்படுகின்றது, பன்சீகரணம் பின்னர் விரிவாக பேசப்படும், சாமான்யமாக, ஐந்து பூதங்களை கொண்டு செய்யப்படுவது என்று கூறலாம், ஆனால் திருவிருத்கரணம் அதாவது மூன்று பூதங்களை வைத்து சிருஷ்டியானது உண்டானதாக பிருகதாரண்யக உபநிஷத்தினில் கூறப்பட்டதால், அதாவது, ஆகாயம் மற்றும் வாயு விடுத்து, எவ்வாறு இது சரியாகும் என்றால். ஆகாயம் மற்றும் வாயுவானது அங்கு உருவமுடையதாக இல்லாததால் என்றுமோ அல்லது உபநிஷத்திற்க்கு சிருஷ்டியினை நிரூபிக்க

தாத்பர்யமில்லை ஆனால் அதன் மித்யாத்தன்மையினை நிரூபிக்கவே என்றுமோ புரிந்துகொள்ளலாம்.

வாயுவானது **அனுஷ்னாஷீத ஸ்பர்ஷவத்வம்** , சூடல்லாதது மற்றும் குளிர்மையல்லாததுமான ஸ்பர்ஷமுடையது காற்று, அது மட்டுமல்லாது அது வீசீவீசீ என்ற ஷப்தமுடையதும் ஆகும்.

## वायोस्तेजः।

காற்றிலிருந்து நெருப்பு உண்டானது.

**விசாரம்**

நெருப்பு **உஷ்னஸ்பர்ஷவத்** சூடான ஸ்பர்ஷமுடையதும், புகுபுகு என்ற ஷப்தமுடையதும், வெளிச்சமான நிறமுடையதும் ஆகும்

## तेजस आपः।

நெருப்பிலிருந்து நீர் உண்டானது.

**விசாரம்**

நீரானது **ஷீத ஸ்பர்ஷவதீ** குளிர்மையான ஸ்பர்ஷமுடையதும், புலுபுலு என்ற ஷப்தமுடையதும், வெள்ளையான நிறமுடையதும், இனிமையான சுவையுடையதானதும் ஆகும்

## अभ्धयः पृथिवी।

நீரிலிருந்து நிலம் உண்டானது.

**விசாரம்**

நிலமானது **கந்தவதீ பிருத்வீ** நல்ல-கெட்ட வாசனையுடையதும், கடகட என்ற ஷப்தமுடையதும், கடினமான ஸ்பர்ஷமுடையதும், பலவகையான நிறமுடையதும், பலவகையான சுவையுடையதும் ஆகும்.

## एतेषां पञ्चतत्त्वानां मध्ये  आकाशस्य सात्विकांशात् श्रोत्रेन्द्रियं सम्भूतम्।

இந்த ஐந்து தத்துவங்களின் இடையில் ஆகயத்தின் சாத்துவிகமான பாகத்திலிருந்து ஷ்ரோத்திரியமானது (காதானது - கேட்கும் தன்மை) உண்டானது.

**விசாரம்**

இங்கு ஷ்ரோத்திரியம் என்றால் காது இந்திரியம் என்றால் புலன், ஆனால் இங்கு காது இந்திரியம் என்றால், நம் முகத்தில் இரு பாகத்திலும் இருக்கும் காது மடல்களை கூறவில்லை, அது வெறும் கோலகம் என்று கூறப்படும் சதையே, ஆனால், அதன் உள்ளில் இருக்கும் கேட்க்கும் தன்மையினை அளிக்கும் விஷயம், காது மடல்கள் இருந்தாலும் கேட்க்கும் தன்மை இல்லாதது காணப்படுவதால். இப்படியே, மற்ற இந்திரியத்திற்க்கும் அறியவேண்டும்.

**वायोः सात्विकांशात् त्वगिन्द्रियं सम्भूतम्।**

வாய்வின் சாத்துவிகமான பாகத்திலிருந்து தோல் இந்திரியமானது உண்டானது.

**अग्नेः सात्विकांशात् चक्षुरिन्द्रियं सम्भूतम्।**

நெருப்பின் சாத்துவிகமான பாகத்திலிருந்து கண் இந்திரியமானது உண்டானது.

**जलस्य सात्विकांशात् रसनेन्द्रियं सम्भूतम्।**

நீரின் சாத்துவிகமான பாகத்திலிருந்து சுவை இந்திரியம் உண்டானது.

**पृथिव्याः सात्विकांशात् घ्राणेन्द्रियं सम्भूतम्।**

நிலத்தின் சாத்துவிகமான பாகத்திலிருந்து நுகரும் இந்திரியம் உண்டானது.

**एतेषां पञ्चतत्त्वानां समष्टिसात्विकांशात्  मनोबुद्ध्यहङ्कार चित्तान्तःकरणानि सम्भूतानि ।**

இந்த ஐந்து தத்துவங்களினுடைய சமஸ்டி (கூட்டான) சாத்துவிக பாகத்திலிருந்து மனது, புத்தி, அஹங்காரம் மற்றும் சித்தமான அந்தக்கரணமம் உண்டாயிற்று.

**விசாரம்**

இந்த நான்கினையும் அந்தக்கரணம் என்று குறிப்பிடுவர். அந்த: என்றால் உள், கரணம் என்றால் கருவி, இதனால் இது உள்ளில் இருக்கும் கருவி என்று அறியப்படுகின்றது ஆனாலும், இது இந்திரியம் அல்ல, மனதும் வேதாந்தத்தில் இந்திரியம் அல்ல என்று ஏற்க்கப்பட்டதால்.

**सङ्कल्पविकल्पात्मकं मनः ।**

சங்கல்பம் மற்றும் விகல்பமானது மனது.

**விசாரம்**

சங்கல்பம் - விகல்பம் என்றால் இவ்வாறு, அவ்வாறு என்று இரட்டை, அதனாலேயே சம்ஷயாத்மகம் என்றும் இதற்க்கு குறிப்பு கூறுவர் அதாவது சந்தேகப்படுவது. இது தூனா அல்லது மரமா என்று.

**निश्चयात्मिका बुद्धिः ।**

நிஸ்சயாத்மிகமானது புத்தி.

**விசாரம்**

நிச்சயம் செய்வது புத்தி. இதற்க்கு அத்யவசாயம் என்று மற்றொரு குறிப்பும் உள்ளது, அதாவது இது தூனல்ல மரமே என்று தீர்மானமானம் செய்வது. பகவத் கீதையிலும் **வியவசாயாத்மிகா புத்தி** என்று கூறப்பட்டுள்ளது, அதற்க்கு அங்கு பக்குவபடுத்தப்பட்ட, வியசாயம் செய்யப்பட்ட என்ற பொருளை சிலர் எடுக்கின்றனர், ஆனால் அது தவறு வியவசாயம் என்பது அத்யவசாயம் தீர்மானம் என்ற பொருளில் எடுக்கவேண்டும்.

## अहंकर्ता अहंकारः ।

நான் செய்பவன் என்பது அஹங்காரம்.

**விசாரம்**

கர்த்தா என்றால் செய்பவர், தான் கர்த்தா என்று சிந்திக்க செய்வது அஹங்காரம், இதற்க்கு வேறொரு குறிப்பு உள்ளது அபிமானம் அதாவது நான் எனது என்ற அபிமானத்தினை தருவது அஹங்காரமே.

## चिन्तनकर्तृ चित्तम् ।

சிந்திக்கசெய்வது சித்தம்.

**விசாரம்**

சித்தமானது சிந்திக்க செய்வது, அதாவது எந்த ஒரு பிரச்சனையிலும் முன்னர் செய்த விஷயங்களை நினைவுகூர்ந்து அதனை சரியாக செய்ய உதவியாக இருப்பது சித்தம்.

முன்னர் கண்டது போல இங்கும் இந்த நான்கிற்க்கும் அதிதேவதைகளை காண்போம்.

## मनसो देवता चन्द्रमाः ।

மனதிற்க்கு தேவதை சந்திரன்.

**விசாரம்**

**சந்த்ரமா மனசோ ஜாத** என்று புருஷ சூக்தத்தில் கூறியது போல, அங்கு அந்த விராட் புருஷனின் மனதிலிருந்து சந்திரன் உண்டானது என்று கூறப்பட்டது, இங்கு அதற்க்கு எதிராக. இங்கு மீண்டும் ஒரு விஷயத்தினை நினைவுபடுத்த அவசியம் உண்டாகின்றது, இங்கு சந்திரன் சூரியன் முதலிய தேவதை என்றால் நாம் காணும் சூரிய சந்திரர்களின் அதிஷ்டானமான தேவதைகள் என்று பொருள், ஸ்தூல விஷயங்கள் இல்லை.

**बुद्धे ब्रह्मा ।**

புத்திக்கு பிரம்மா.

**விசாரம்**

இங்கு பிரம்மா என்பது நன்முகனை குறிப்பது, வேதாந்தத்தில் குறிப்பிடும் பிரம்மம் இல்லை என்பது பொருள். இரண்டு சொர்க்களுக்கும் உள்ள வேறுபாடு இது பிரம்மா என்பது ஆண்பால் சொல், அந்த ஆத்மா - பிரம்மம் என்பது பலவின்பால் சொல், சமஸ்கிருதத்தினில் நபும்சகலிங்கம் என்று கூறப்படுவது.

**अहंकारस्य रुद्रः ।**

அஹங்காரத்திற்க்கு ருத்திரன்.

**चित्तस्य वासुदेवः ।**

சித்தத்திற்க்கு வாசுதேவன்.

**एतेषां पञ्चतत्त्वानां मध्ये आकाशस्य राजसांशात् वागिन्द्रियं सम्भूतम् ।**

இந்த ஐந்து தத்துவங்களுக்கு இடையில் ஆகாயத்தின் ராஜச பாகத்திலிருந்து வாக்கு இந்திரியம் உண்டாயிற்று.

**விசாரம்**

வாக்கு இந்திரியம் என்றால் பேச உபயோகமாகும் கருவியான வாய் என்று பொருள். இதனால்தானோ என்னவோ, கனல் பறக்கும் பேச்சு, தீ கக்கும் பேச்சு முதலியதாக கூறப்படுகின்றது.

**वायोः राजसांशात् पाणीन्द्रियं सम्भूतम् ।**

காற்றின் ராஜச பாகத்திலிருந்து கை இந்திரியம் உண்டாயிற்று.

**वन्हेः राजसांशात् पादेन्द्रियं सम्भूतम्।**

நெருப்பின் ராஜச பாகத்திலிருந்து கால் இந்திரியம் உண்டாயிற்று.

**जलस्य राजसांशात् उपस्थेन्द्रियं सम्भूतम्।**

நீரின் ராஜச பாகத்திலிருந்து குத இந்திரியம் உண்டாயிற்று.

**விசாரம்**

இதனை எருவாய் (தமிழில் தான்) என்றும் கூறுவர்.

**पृथिव्या राजसांशात् गुदेन्द्रियं सम्भूतम्।**

நிலத்தின் ராஜச பாகத்திலிருந்து மூத்திர இந்திரியம் உண்டாயிற்று.

**விசாரம்**

இதனை கருவாய் (மீண்டும், தமிழில் தான்) என்றும் கூறுவர்.

**एतेषां समष्टिराजसांशात् पञ्चप्राणाः सम्भूताः।**

இவைகளின் சஷ்டியான (கூட்டான) ராஜசமான பாகத்திலிருந்து ஐந்து பிராணங்கள் உண்டாயிற்று.

**விசாரம்**

பிராணனைக்குறித்த விசாரமானது பிராணமயகோஷத்தினை விசாரிக்கும் போதே செய்தாலும், இங்கு ஒரு விஷயம் நினைவில் கொள்ளவேண்டியது. இங்கு வேறு சிலர் மேலும் ஐந்து வகையான பிராணனை, ராக, கூர்ம, தனஞ்சய முதலியதினை ஏற்க்கின்றனர், இது வேதாந்தத்தில் ஏற்க்கப்படாத ஒன்று என்பதால், ஐந்து பிராணங்கள் என்று என்னிக்கை கூறப்பட்டதால், அதனை இங்கு நாம் விளக்கவில்லை.

**एतेषां पञ्चतत्त्वानां तामसांशात् पञ्चीकृतपञ्चतत्त्वानि भवन्ति।**

இவை ஐந்து தத்துவத்தின் தாமசமான பாகத்திலிருந்து பன்சீகரணமான ஐந்து தத்துவங்கள் உண்டாகின்றது.

**விசாரம்**

இங்கு கூறப்பட்ட ஆகாயம் முதலியவை தன்மாத்திரை என்று கூறப்படுவது, அதாவது, தத் - அதன், மாத்திரை - மட்டும், அதாவது இங்கு அதனுடைய குணங்கள் மட்டும் இருக்கும் பன்சீக்ரணம் செய்யும் முன்பு, அதன் பின்னர் அது மற்றவையின் குணங்களையும் அடைகின்றது. இந்த பன்சீகரணம் என்ன என்பதினை கவனமாக தெறிந்துக்கொள்ளவும்.

**पञ्चीकरणं कथम् इति चेत्।**

**एतेषां पञ्चमहाभूतानां तामसांशस्वरूपम् एकमेकं भूतं द्विधा विभज्य एकमेकमर्धं पृथक् तूष्णीं व्यवस्थाप्य अपरमपरमर्धं चतुर्धा विभज्य स्वार्धमन्येषु अर्धेषु स्वभागचतुष्टयसंयोजनं कार्यम्। तदा पञ्चीकरणं भवति।**


பன்சீகரணம் எவ்வாறு என்றால். இந்த ஐந்து மஹாபூதங்களின் தாமச பாகத்திலிருந்து ஒவ்வொரு பூதத்தினையும் இரண்டாக பிரித்து, ஒவ்வொன்றின் ஒரு பாதியினை தனியாக வைத்து, அதனில் மற்ற பாதியினை நான்காக பிரித்து, தன்னுடைய ஒரு பாதியினை மற்ற நான்கினையும் சேர்த்துவைக்கவேண்டும். அப்போது பன்சீகரணம் உண்டாகின்றது.

**விசாரம்**


படத்தினை கண்டு புரிந்துகொள்ளவும்.

பன்சீகரண பிரகிரியா


பன்சீகரணம் செய்யப்படாத பஞ்சமகாபூதம்




இருபிரிவு பிரகிரியா



பன்சீகரணம் செய்யப்பட்ட பஞ்சமகாபூதம்




**एतेभ्यः पञ्चीकृतपञ्चमहाभूतेभ्यः स्थूलशरीरं भवति। एवं पिण्डब्रह्माण्डयोरैक्यं सम्भूतम्।**

இந்து பன்சீகரணம் செயப்பட்ட ஐந்து மஹாபூதங்களிலிருந்து ஸ்தூல உடலானது உண்டாகின்றது.
இவ்வாறு பிண்டம் மற்றும் பிரம்மாண்டத்திற்க்கும் ஐக்கியமானது நடந்தது.

**स्थूलशरीराभिमानि जीवनामकं ब्रह्मप्रतिबिम्बं भवति। स एव जीवः प्रकृत्या स्वस्मात् ईश्वरं भिन्नत्वेन जानाति।**

ஸ்தூல உடலை (நான் என்று) அபிமானிக்கும் ஜீவன் எனப்படும் பிரம்மத்தின் பிரதிபிம்பம் ஆகும். அந்த ஜீவனே பிரகிருத்தியினால் தன்னிலிருந்து ஈஷ்வரனை வேறாக அறிகின்றான்.

**விசாரம்**

இங்கு பலவகை ஈஷ்வர - ஜீவ வாதத்தினில் பிம்ப - பிரதிம்ப வாதமானது ஏற்க்கப்பட்டுள்ளது. மற்ற வாதங்களானது, ஆபாசவாதம், அவச்சேஷவாதம் ஆகும்.

**பிம்ப - பிரதிபிம்ப வாதம் - விவரணம்** என்பது பிரம்மசூத்திரத்தின் **ஸ்ரீ சங்கராசாரியாரின்** பாஷ்யத்தின் மேல் எழுதப்பட்ட **ஸ்ரீ பத்மபாதாசாரியாரின்**

**பன்சபாதிகா** எங்கின்ற கிரந்தத்தின் மேல் **பிரகாஷாத்மா சுவாமிகள்** எங்கின்ற எழுதப்பட்ட கிரந்தம் அஞ்ஞானம் என்கிற வரையறையினால் உண்டான சம்பந்தத்தால் சைதன்யத்தினில் உண்டான பிம்பம் ஈஷ்வரன், அதன் பிரதிபிம்பம் ஜீவன் என்று. இங்கு பிரதிபிம்பத்தினை சத்தியமாக ஏற்க்கின்றனர்.

**ஆபாசவாதம்** (நிழல் தோற்றம்) - **வித்யாரண்ய ஸ்வாமிகள் பன்சதஷீ** . பாஷ்யகாரரும் இதனையே ஏற்க்கின்றார் உபதேசசாஹசரி, வாக்யவிருத்தி முதலியவைகளில். அந்தகரணந்த்திலுண்டாகும் ஆபாசம் (தோற்றம்) ஜீவன் என்று கூறுவர். ஆனால் இவ்வாறு கூறினால் தூக்கத்தில் அந்தகரணம் இல்லாததால் அங்கு ஜீவனானது இல்லாமல் போகும் நிலை எற்ப்படும் என்றால், தவறு, அந்தகரணத்தின் மாற்றமான அவித்யையின் அம்சத்தின் பிரதிபலிப்பு தோற்றமே ஜீவன் என்று.அந்த அவித்யையோ தூக்கத்திலும் இருப்பதால் ஒரு பிரச்சனையும் இல்லை.

இங்கு நினைவில் வைக்கவேண்டியது, மாயா அதிஷ்டான சைதன்யம், மாயா, அதனில் சைதன்ய ஆபாசம் இது மூன்றும் சேர்ந்து ஈஷ்வரன் என்றும், அவித்தை அதிஷ்டான சைதன்யம், அவித்தை, அதனில் சைதன்ய ஆபாசம் இது மூன்றும் சேர்ந்து ஜீவன் என்றும். ஆபாசத்தினை மித்யையாக ஏற்க்கின்றனர்.

**அவச்சேத வாதம்** - மற்றும் சிலர். சுத்தசத்துவம்கூடிய மாயாகூடிய சைதன்யம் ஈஷ்வரன் என்றும், மலினசத்துவம்கூடிய அந்தக்கரணத்தின் அவித்தைகூடிய சைதன்யம் ஜீவன் என்றும்.

ஆனால் அத்வைதத்தில் த்வைதம் போல இத்துனை சித்தாந்தம் இருக்கையில் நாம் எதனை பின்பற்றுவது, எது சரி, எது தவறு என்ற கேள்வி எழும் அதற்க்கு, **ஸ்ரீ சுரேஸ்வராசாரியாரும்,ஸ்ரீ வித்யாரன்யரும்** கூறுவதுபோல, யாருக்கு எந்த முறையில் பூர்வ ஜன்ம வாசனையாலோ, இயல்பாகவோ உண்டாகின்றதோ அதுவே அவர்கள் மோக்ஷமடைய வழி என்று. ஆனால், இதன்படி ஒருவர் த்வைத தர்ஷனத்தினை பின்பற்றினால், அதுவும் சரியே (?) அதாவது, அதனிலிருந்து பக்குவப்பட்டு பின்னர் அத்வைத சாஸ்திரத்திற்க்கு வர என்று பொருள்.

**अविद्योपाधिः सन् आत्मा जीव इत्युच्यते।**

அவித்தை வரையறையாக இருக்கும் ஆத்மா ஜீவன் என்று கூறப்படுகிறது.

**मायोपाधिः सन् ईश्वर इत्युच्यते।**

மாயா வரையறையாக இருக்கும் ஆத்மா ஈஷ்வரன் என்று கூறப்படுகிறது.

**விசாரம்**

எவ்வாறு ஆகாயமானது , பானை ஆகாயம், நீர் ஆகாயம், மேக ஆகாயம் மற்றும் மஹா ஆகாயம் என்று நங்கு வகையாக தோன்றுகின்றதோ அதுபோல, சைதன்யமும், கூடஸ்தம், ஜீவன், ஈஷ்வரன் மற்றும் பிரம்மம் என்று முறையாக வேறானதுபோல தோன்றுகின்றது.

**கூடஸ்தம்** - பிரத்யகாத்மா (தன்னுடையாத்மா), ஜீவ சாக்ஷீ முதலிய பெயர்களால் அறியப்படுகின்றது. பட்டரையில் இரும்பினை அடிக்க அதனை வைக்கும் இடம் ஆடாது இருக்க ஒரு இரும்பு நிலையினை வைக்கின்றனர் அதனை கூடம் என்று கூறுவர், அதுபோல, இதுவும் அசியாததாக இருப்பதால், அதாவது ஜீவத்தன்மை எந்த அதிஷ்டானத்தில் நிலைப்பட்டதோ அது கூடதம் ஆகும்.

**ஜீவன்** - அவித்தை கூடிய சைதன்யம் என்றோ பல காம. கர்ம வாசனைகள் இருக்கும் புத்தியில் பிரதிபலிக்கும் சைதன்யம் ஆகும்.

**ஈஷ்வரன்** - அந்தர்யாமி, சுத்தசத்துவம் என்றும் அறியப்படும் - மாயை கூடிய சைதன்யம் என்றோ மாயாவில் பிரதிபலிக்கும் சைதன்யம் என்றோ ஆகும்

**பிரம்மம்** - மஹாகாசத்தினைப்போல உள்வெளி இல்லாமல் எல்லா இடத்திலும் முழுவதுமாக வியாபித்து இருப்பதான சுத்தமான, பிறிவற்றதான முழுமையான சைத்தன்யமே பிரம்மம் என்று கூறப்படுகின்றது.

பொதுவாக, நாம் ஆபாசவாதம் எங்கின்ற வாதத்தினை ஏற்கின்றோம், அவச்சேத மற்றும் பிரதிபிம்ப வாதத்தினை அல்ல. ஆபாசவாதமானது - ஆபாசத்துடனான அந்தக்கரணம் கூடிய சைதன்யம் ஜீவன், அதுபோல அவச்சேதவாதத்தில் அந்தக்கரணம் கூடிய சைத்தயம் ஜீவன். அதாவது அந்தகரணமானது ஆபாசம் கூடியதானதும், அது அல்லாதது என்றும்

இரண்டிற்க்கும் வேறுபாடு. இதனில் என்ன வேற்பாடு, ஏன் ஆபாசவாதத்தினை ஏற்க்கின்றோம் என்றால், பாஷ்யகாரரும், வித்யாரண்யமுனி போன்றவர்களும் ஏற்பதால், சரியானதாலும் கூட. அதாவது ஆபாசமில்லாத அந்தகரணம் கூடிய சைத்தனியத்தினை பிராமாதா (அறிபவர்) என்று ஏற்றால், பானைக்கூடிய சைதன்யமும் பிரமாதா ஆகும் நிலை ஏற்ப்படும். அந்தகரணமும் பானையும் பூதகாரியமானதால். ஆபாசத்தினால் ஏற்றால் இந்த தோஷங்களானது உண்டாகாது. தெளிவான (சத்துவ) குணத்தின் காரியம் அந்தகரணம், தெளிவில்லாத (தமோ) குணத்தின் காரியம் பானை முதலிய விஷயங்கள் என்பதால், தெளிவானதிலேயே பிரதிபிம்பம் தோன்றுவது இயல்பு என்பது நாம் அறிந்ததால்.

ஜீவனானது தன்னுடைய புண்ணிய-பாப காரணத்தினால் தோன்றுவது, ஆனால் ராமர் முதலியவர்கள் சமஷ்டி புண்ணியத்தாலும், சமஷ்டி பாபத்தாலும் தோன்றுபவர்கள். சமஷ்டி புண்ணியத்தால் தோன்றுவதால் சதுக்களுக்கு அவர்கள் சந்தோஷத்தினை தருபவர்களாகவும், சமஷ்டி பாபத்தால் அசுரர்களுக்கு துன்பம் தருபவர்களாகவும் இருகின்றனர். அதுமட்டுமல்லாது இவர்கள் சரீரம் யோகிகளின் சரீரம் போல பஞ்சபூதத்தால் ஆன சரீரம் அல்ல, ஆனால் அதற்க்கு மாறாக சைதன்யத்தினை சார்ந்ததாக உள்ள மாயாவின் மாற்றம். இல்லாவிட்டால், உடலில் இருக்கும் பிரம்மத்தின் திருஷ்டியினால் மட்டும் இவர்களை பூஜிப்பது பொறுந்தும் என்பதால், மாடு முதலியவையும் பிரம்மம் உள்ளில் உடையதால் பூஜிக்க தகுந்ததாக ஆகும். அதுமட்டுமல்லாது, இவர்களுக்கு, மற்றவர்களை (ஜீவர்களை) போல ஷாஸ்திரத்தினை படிப்பதனாலேயே ஞானம் உண்டாகும் என்ற வாதமும் எடுபடாது, ஜீவங்களுக்கே ஆத்மஞானம் உண்டானதும் 'நான் பிரம்மம்' என்ற, ஆவரணமானது அழிகின்றது, ஆனால், இவர்களுக்கோ **(பகவான் என்பதின் பொருள் - இதனை சரியாக புரிந்துகொள்ளவும்)** உபதேசமில்லாமலேயே 'நான் பிரம்மமாக இருக்கின்றேன்' என்கிற ஞானமானது ஆவரணமல்லாததால் தானே ஒளிர்கின்றதாக இருப்பதால், ஆவரண நாசமோ, விஷய பிரகாசமோ ஈஷ்வரனுக்கு, பகவானுக்கு அவசியமிலாமல் போகின்றது. இருந்தாலும், அவர்களுடைய சரீரமும் மாயா காரியமே என்பதால், பிரம்மம் அல்ல, மித்யையே.

एवं उपाधिभेदात् जीवेश्वरभेददृष्टिः यावत्पर्यन्तं तिष्ठति तावत्पर्यन्तं जन्ममरणादिरूपसंसारो

**न निवर्तते।**

இவ்வாறு உபாதி வேறுபாட்டால் ஜீவன் மற்றும் ஈஷ்வரன் வேற்றுமையானது எவ்வளவு காலம் இருக்கின்றதோ அதுவரை பிறப்பு - இறப்பு முதலியதான சம்சாரமானது நீங்குவதில்லை.

**तस्मात्कारणान्न जीवेश्वरयोर्भेदबिद्धिः स्वीकार्या।**

அந்த காரணத்தால் ஜீவன் - ஈஷ்வரனின் வேறுபடுத்தும் அறிவை ஏற்க்கக்கூடாது.

**விசாரம்**

உண்மையில் ஈஷ்வரத்தன்மையோ அல்லது ஜீவத்தன்மையோ இல்லை, காரணம் அஞ்ஞாத்தினால் தோன்றும் இந்த ஜீவத்தன்மையானது அஞ்ஞானத்தில் இருக்கும் பிரதிபிம்பமே என்பதால். பிம்பத்தன்மையும் பிரதிபிம்பத்தன்மையும் மித்யையே, சைதன்யஸ்வரூபமாக பிம்பமும், பிரதிபிம்பமும் உண்மையே.

**ननु साहंकारस्य किंचिज्ज्ञस्य जीवस्य निरहंकारस्य सर्वज्ञस्य ईश्वरस्य तत्त्वमसीति महावाक्यात् कथमभेदबुद्धिः स्यादुभयोः विरुद्धधर्माक्रान्तत्वात्।**

ஆனால், அஹங்காரம் கூடிய சிற்றறிவுள்ள ஜீவனுக்கும் அஹங்காரமற்ற பேறறிவுள்ள ஈஷ்வரனுக்கும் தத்துவமஸி என்ற மஹாவாக்கியத்தால் எவ்வாறு பிரிவற்ற அறிவுண்டாகும், முரண்பாடுள்ள தன்மையுள்ளதால்.

**விசாரம்**

ஜீவன் எப்பொழுதும், நான் எல்லாம் அறிந்தவன் என்ற நிலை அடைய இயலாது என்பதால், எல்லாவற்றினையும் குறித்த அறிவும் இல்லாததால் சிற்றறிவு ஆகிறது.
ஈஷ்வரனோ இயல்பாகவே ஞானம், வைராக்யம், ஐஷ்வர்யம், வைராக்யம் முதலிய குணங்கள் முழுமையாக அடையப்பெற்றவர் என்பதால் பேறறிவு.

தத்துவமஸி - தத் - அது (ஈஷ்வரன்), த்வம் - நீ (ஜீவன்), அஸி - ஆக இருக்கின்றாய். அதாவது ஈஷ்வரனும் நீயும் வேறுபாடில்லாததாக

இருக்கின்றாய் என்று பொருள். அது எப்படி, வேறுபாட்டினை இவ்வாறு நிரூபித்துவிட்டு இப்பொழுது இவ்வாறு கூறப்படுகின்றது என்றால், பின்னர் (அடுத்து) கூறப்படும் லக்ஷனையால் (குறிப்பால்).

மஹாவாக்கியம் என்றால் ஜீவன் மற்றும் பிரம்மத்தின் பிறிவற்ற நிலையினை நேரடியாக போதிக்கும் வாக்கியம். இதன் சம்பந்தத்தில் வேறொரு வாக்கியம் உள்ளது அது அவாந்தரவாக்கியம் அதாவது ஜீவனை குறித்தோ அல்லது பிரம்மத்தினை குறித்தோ மட்டும் கூறும் வாக்கியம் ஆகும்.

அது எவ்வாறு இப்படி நிச்சயிக்கப்படுகின்றது என்றால், உபகிரமம் முதலிய ஆறு விதமான தாத்பர்யத்தினை நிச்சயிக்க உபயோகமான லிங்கங்களை (குறிகளை) கொண்டு என்று பதில். அதாவது ஒரு உபநிஷத் எந்த விஷயத்தினை குறித்து போதிக்கின்றது என்பதினை அறிய இது உபயோகப்படுத்தப்படுகின்றது, தைத்திரீய உபநிஷத்தில் இந்த விஷயத்தினை காண்போம் (இங்கு தத்துவமசியினை எடுக்காமல் தைத்திரீயத்தை எடுப்பதர்க்கு காரணம் இங்கு செய்யப்படும் பஞ்சகோஷ விசாரமே) -

1. **உபகிரமம் - உபசமாரம்** = முன்னுரை - முடிவுரை -- **பிரம்மவிதாப்நோதி பரம்** பிரம்மத்தினை அறிந்தவர் பரத்தை (பிரம்மத்தை) அடைகின்றார் என்று துவங்கி, **ச யஷ்சாயம் புருஷே** இந்த புருஷனில் எதுவோ எது இந்த சூரியனிலுமோ அது ஒன்றே என்று முடிகின்றது.

2. **அப்யாசம்** - மீண்டும் மீண்டும் ஒரு விஷயத்தினை கூறுவது -- **தஸ்மாத்வா ஏதஸ்மாத்** அந்த இந்த ஆத்மாவிலிருந்து ஆகாயம் உண்டானது, **பீஷாஸ்மாத்வாத பவதே** இதற்க்கு பயந்து காற்று ஓடுகின்றது (வீசுகின்றது).

3. **அப்பூர்வதா** - மற்றதில் இல்லாத சிறப்பு - **யதோ வாசோ நிவர்தந்தே** எங்கிருந்து வாக்கு திரும்புகின்றதோ அடையாமல், என்பதால் விஷயமாக நிலை கூறுதல்.

4. **பலன்** - சிறப்பு பலன் - **ஸோஷ்னுதே சர்னாங்காமான்சஹ** அவர் அடைகின்றார் எல்லா விறுப்பட்டப்பலனையும் எவர் பிரம்மத்திலிருந்து வேற்படாத நிலை அடைந்தரோ.

**5. அர்தவாதம்** - போற்றிகூறல் - **உதரமந்தரே குருதே அததஸ்ய பயம் பவதி** எவர் சிறிது வேறுபட்டினை காண்கின்றாரோ அவருக்கு அப்பொழுது பயமானது தோன்றுகின்றது.

**6. உபபத்தி** - அதனால் நிச்சயம் ஆவது - **யதோ வா இமானி பூதானி ஜாயந்தே** யதனிலிருந்து இந்த பூதங்கள் உண்டாகின்றதோ, என்று காரணமும் காரியமும் வேறுபடாததினை கூறுகிறது.

இப்படி தைத்திரீய உபநிஷதானது பிரம்மத்தை குறித்தே கூறுகின்றது என்று நிச்சயம் ஆகின்றது இப்படியே மற்ற இடங்களிலும்.

इति चेन्न। स्थूलसूक्ष्मशरीराभिमानी त्वंपदवाच्यार्थः। उपाधिविनिर्मुक्तं समाधिदशासंपन्नं शुद्धं चैतन्यं त्वंपदलक्ष्यार्थः।

என்று கூறினால் தவறு, ஸ்தூல மற்றும் சூக்கும சரீர அபிமானி த்வம் (நீ) என்ற சொற்பொருள். வரையறையிலிருந்து விடுபட்ட சமாதிநிலை அடைந்த சுத்த சைதன்யம் த்வம் (நீ) என்ற குறிப்புப்பொருள்.

एवं सर्वज्ञत्वादिविशिष्ट ईश्वरः तत्पदवाच्यार्थः। उपाधिशून्यं शुद्धचैतन्यं तत्पदलक्ष्यार्थः।

இவ்வாறு, பேறறிவு முதலியவை கூடிய ஈஷ்வரன் தத் சொற்ப்பொருள், வரையறையற்ற சுத்த சைதன்யம் தத் குறிப்பு பொருள்.

**விசாரம்**

இங்கு சொற்பொருள் என்றால், நேரடியாக அந்த சொல்லால் எந்த பொருளானது அறியப்படுகின்றதோ அது. குறிப்புப்பொருள் என்றால் அது குறித்துக்காட்டும் பொருள். இந்த குறிப்புபொருள் மூன்று வகையாக இருக்கலாம், **ஜஹத் லக்ஷணா** (விட்ட லக்கனை, குறிப்பு), **அஜஹத் லக்ஷணா** (விடாத லக்கனை), **ஜஹதஜத் லக்ஷணா** (விட்டும்விடாத லக்கனை).

**ஜஹத் லக்ஷணா** - விட்ட லக்கனை - கங்கயில் கிராமம், அங்கு கங்கை என்பதால் கங்கைக்கரையினை குறிப்பது விட்ட லக்கனை, இங்கு

சொற்பொருளான கங்கயின் பிரவாகத்தில் என்பதி விட்டதால் இப்படி பெயர்.

**அஜஹத் லக்ஷணா** - விடாத லக்கனை - வெள்ளை ஒடுகின்றது, இங்கு வெள்ளை என்பது நிறம், அது தனியாக ஒடுவது என்பது இயலாது, அதனால் இங்கு வெள்ளையான நிறமுடைய குதிரையில் குறிப்பு செல்கிறது. வெள்ளை என்பதி விடாது பொருள் எடுக்கப்பட்டதால் இந்த பெயர்.

**ஜஹதஜத் லக்ஷணா** - விட்டும்விடாத லக்கனை - இவன் அந்த தேவதத்தன், இங்கு இவன் என்பது இந்த நேரத்தில் இருக்கும் ஒருவரையும், அவன் என்பது வேறொரு கடந்தகாலத்தில் அதே நபரினையும் குறிப்பதால், அந்த தேசம் மற்றும் காலம் கூடியவரையும் இந்த தேசம் மற்றும் காலம் கூடியவரையும், சில குணங்களை விட்டு, அவரின் யதார்த சுவரூபத்தினை விடாமல் செய்யப்படும் லக்கனை விட்டும்விடாத லக்கனை. இதனையே **பாகதியாக லக்ஷணை** என்றும் கூறுவர்.

லக்கனையினை குறிப்பு என்றும் கூறுவர்.

एवं च जीवेश्वरयो चैतन्यरूपेणाऽभेदे बाधकाभावः।

இவ்வாறு ஜீவன் மற்றும் ஈஷ்வரனுக்கு சைதன்ய ஸ்வரூபமாக பிறிவற்ற நிலையில் தடையில்லை.

**விசாரம்**

விட்டும் விடாத லக்கனையினை தத்துவமஸி முதலிய மஹாவாக்கியத்தில் ஏற்கின்றோம், அதன்படி அவிதயா வரையறையினையும், மாயா வரையறையினையும் நீக்கி சைதன்யத்தினை மட்டும் ஏற்பது.

एवं च वेदान्तवाक्यैः सद्गुरूपदेशेन च सर्वेष्वपि भूतेषु येषां ब्रह्मबुद्धिरुत्पन्ना ते जीवन्मुक्ताः इत्यर्थः।

இவ்வாறு வேதாந்த வாக்கியங்களாலும் சத் குருவின் உபதேஷத்தினாலும் எல்லா உயிரினங்களிலும் எவருக்கு பிரம்ம புத்தியானது உண்டாகின்றதோ அவர்கள் ஜீவன்முக்தர்கள் என்று பொருள்.

**விசாரம்**

மோக்ஷமானது இருவகைப்படும், அதாவது அந்த நிலை, ஒன்று ஜீவன்முக்தி மற்றொன்று விதேஹமுக்தி என்றும்.

**ஜீவன்முக்தி** அதாவது ஜீவன் - உயிரோடிருக்கும்போதே முக்தி - மோக்ஷநிலை, எவர்கள் தாங்கள் உயிரோடிருக்கும்போதே சாஸ்திரத்தினை ஆச்சாரியாரிடத்திலிருந்து முறையாக கற்று அதனை சிந்தித்தால் தெளிவை அடைந்தவர்களோ அவர்களுக்கு, இந்த அவித்தையானது அழிவுற்றது, அதனால் சம்சாரானமானது அழிவுற்றது, அதனால் ஆவரணம் மற்றும் விக்ஷேபமானது அழிந்ததால் உயிருள்ளபோதே பிரம்மநிலை அடைகிறார்கள், பிரம்ம நிலையில் இருக்கிறார்கள், **பிரம்மவித் பிரம்மைவ பவதி** பிரம்மத்தினை அறிந்தவர் பிரம்மமாகவே இருக்கின்றார் முதலிய வாக்கியத்தால்.

**விதேஹமுக்தி** அதாவது விதேஹ - உடல் விழுந்தபின், இறந்தபின் முக்தி - மோக்ஷம், எவருக்கு சாதனையால் இங்கு ஈஷ்வர சாக்ஷாத்காரமானது உண்டானதோ அவருக்கும், எவருக்கு சாஸ்திரத் சிரவணம் முதலியவைகளால் ஞானம் உண்டானாலும் அதனில் பூர்வ சம்ஸ்காரத்தினால் சகஜமாக நிலைபெற இயலவில்லையோ அவருக்கும்.

அப்படியானால், இதனில் என்ன வித்யாசம், பிரம்மத்தினை இருவரும் உணர்ந்தவர் என்பதால் எந்த வித்யாசமும் இல்லை, அறிவானது ஒரே வடிவம் என்பதால், ஆனால் உடல் விழும்வரையில் பேதபுத்தியானது இருக்கும் என்பதே பிரச்சனை.

இங்கு, முன்னர் மாயாவினையும் அவித்தையினையும் குறித்து இங்கு விசாரம் செய்யப்படும் என்று கூறப்பட்டது (!!! காணவும், பிரம்மத்தை சார்ந்திருப்பதாக சத்துவ, ரஜஸ் மற்றும் தமோ குணமான மாயா இருக்கின்றது, என்ற விசாரத்தில்)

அதாவது மாயையும் அவித்தையும் ஒன்று என்ற நிலையில் அவித்தையானது அழிந்தபின், (மாயயையும் அழிவதால், ஒன்றானதால்) அந்த

ஜீவன்முக்தரான ஞானியின் உடலானது நிலைத்து இருப்பது இயலாது, காரணம் அழிந்ததால், காரியமும் அழியும் என்ற நியாயப்படி, அதனால் இங்கு லேஷ அவித்யா எங்கின்ற உடலைத்தாங்க ஒரு சிறிய அவித்தையினை ஏற்க்கின்றனர்.

அது இரண்டும் வெவ்வேறு என்ற நிலையில் அவித்தயானாது அழிந்துபோனாலும் மாயையானது அழியாததால் ஈஷ்வர அதீனமான மாயா அவரின் பிராரப்தத்தினை நடத்துகின்றது என்று கூறுவர்.

இரு நிலையிலும் பிரச்சனை இல்லை பிராரப்தம் இரண்டு நிலையிலும் அழியாததால் பிராப்தம் அனுபவிப்பதாலேயே அழியும் என்ற நியமம் இருப்பதால், அந்த பிராரப்தமே லேஷ அவித்தை என்று கூறலாம்.

**ननु जीवन्मुक्तः कः ?**

ஆனால், ஜீவன்முக்தரானவர் யார்.

**यथा देहोऽहं पुरुषोऽहं ब्राह्मणोऽहं शूद्रोऽहमस्मीति दृढनिश्चयस्तथा नाहं ब्राह्मणः न शूद्रः न पुरुषः किन्तु असंगः सच्चिदानन्द स्वरूपः प्रकाशरूपः सर्वान्तर्यामी चिदाकाशरूपोऽस्मीति दृढनिश्चय रूपोऽपरोक्षज्ञानवान् जीवन्मुक्तः ॥**

எவ்வாறு, நான் உடல், நான் மனிதன், நான் பிராமணன், நான் சூத்திரன் என்ற தீர்மாணமோ, அவ்வாறு, நான் பிராம்மணன் இல்லை, நான் சூத்திரன் இல்லை, நான் மனிதன் இல்லை ஆனால் பற்றற்ற சச்த்தானந்த இயல்பினன், பிரகாசஸ்வருபன், எல்லாவற்றிலும் ஊடுருவியிருப்பவன், சிதாகாசரூபன் என்ற தீர்மாணமான அபரோக்ஷமான அறிவுடையவர் ஜீவன்முக்தர்.

**விசாரம்**

**பரோக்ஷம்** - நேரடியாக அல்லாத, பிரத்யக்ஷமாக இல்லாத.
**அபரோக்ஷம்** - நேரடியாக, பிரத்யக்ஷமாக.

**ब्रह्मैवाहमस्मीत्यपरोक्षज्ञानेन निखिलकर्मबन्धविनिर्मुक्तः स्यात् ।**

பிரம்மமாகவே நான் இருக்கின்றேன் என்ற அபரோக்ஷமான அறிவால் எல்லா கர்மத்தினிலிருந்தும் விடுதலை அடைந்தவர் ஆகின்றார்.

**விசாரம்**

அதாவது, ஞானமானது எல்லா கர்மங்களையும் வறுபட்ட விதையினைப்போல முலைக்க சாமர்த்தியம் இல்லாதது ஆக்கிவிடுகின்றது. இதற்க்கு என்ன பிரமாணம் என்றால், **தரதி ஷோகமாத்மவித்,** ஆத்மாவினையுணர்ந்தவர் சோகத்தினை கடக்கின்றார், என்பது சோகமானது அவித்தையின் காரியமானதால், கர்மம் என்பதால் என்பது முதலிய ஷ்ருதிகளால்.

**ஞானாக்னி சர்வகர்மாணி பஸ்மசாத் குருதே ததா** எவ்வாறு, நெருப்பானது எரிபொருளை முழுவதுமாக சாம்பலாக்குகின்றதோ அதுபோல ஞான நெருப்பானது எல்லா கர்மங்களையும் சாம்பலாக்குகின்றது என்பது முதலான ஸ்மிருதியும்.

## कर्माणि कतिविधानि सन्तीति चेत् आगामिसञ्चितप्रारब्धभेदेन त्रिविधानि सन्ति ।

கர்மங்கள் எத்தனை வகைப்படும் என்றால், ஆகாமி, சன்சிதம் மற்றும் பிராரப்தம் என்ற பிறிவுகளால் மூன்ற்வகைப்படும்.

**விசாரம்**

இங்கு கர்மம் என்று செயலினை கூறினாலும் அதன் பலனிர்க்கும் கர்மம் என்ற பிரயோகமானது காணப்படுகின்றது, சன்சிதம், ஆகாமி மற்றும் பிராரப்தம் என்று. சன்சிதம் என்றால் நம்முடைய எல்லா பிறவிகளிலும் செய்த புண்ணிய - பாவ கூட்டத்தின் பெயர். ஆகாமி என்பது அதனிலிருந்து சிறிது நம்முடைய வரப்போகும் பிறவிகளுக்கு எடுக்கப்பட்ட கர்மம், அதாவது தானிய கிடங்கினிளிருந்து சில தினத்திற்க்கு எடுக்கப்படும் தானியத்தைபோல. பிராரப்தம் என்பது நாம் இப்பொழுது அனுபவிக்கும் கர்மங்களின் பெயர். இதனில் முதல் இரண்டும் ஞானமானது அடைந்த பின்னர் தானே அழிந்துவிடும் ஆனால், பிராரப்தம் மட்டும் அனுபவிபதானலேயே அழியும் என்ற நிலையிருப்பதால் அனுபவிக்கவேண்டியது ஆகின்றது.

## ज्ञानोत्पत्त्यनन्तरं ज्ञानिदेहकृतं पुण्यपापरूपं कर्म यदस्ति तदागामीत्यभिधीयते ।

ஞானமானது உண்டானபின்னர் ஞானியினால் செயப்பட்ட புண்ணிய - பாவமான கர்மங்கள் எது இருக்கின்றதோ அது ஆகாமி எனப்படும்.

**விசாரம்**

இது ஏன் கூறப்படவேண்டும் என்றால் , நாம் செய்த கர்மமானது பலன் கொடுக்காது போகாது என்ற நியமத்தால், செய்த கர்மத்தின் பலன் அனுபவிக்க பின்னர் அவருக்கு உடலானது இல்லை என்பதால், பின்னர் இந்த கர்மங்கள் என்ன ஆகும் என்ற விசாரம் செய்யப்படும்.

## सञ्चितं कर्म किम् ?

## अनन्तकोटिजन्मनां बीजभूतं सत् यत्कर्मजातं पूर्वार्जितं तिष्ठति तत् सञ्चितं ज्ञेयम् ।

சன்சிதம் என்றால் என்ன.
பலகோடி பிறவிகளுக்கு விதையாக இருப்பது எந்த கர்மகூட்டமோ முன்னர் எது சேர்க்கப்பட்டதோ அது சன்சிதம் என்றறியவேண்டும்.

**விசாரம்**

ஸன்சித கர்மம் என்றால் என்ன. சன்சிதம் - சேர்க்கப்பட்டது.

நாம் பலகோடி ஜன்மகளாக எந்த கர்மத்தினை செய்தோமோ அது ஒரு பிறவியில் அனுபவித்து தீர்க்க இயலாதது என்பதால், ஒவ்வொறு பிறவியிலும் செய்யப்பட்ட கர்மத்தின் ஒரு பகுதி ஒரு கர்மக்கூட்டத்தில் சேறுகின்றது அது சன்சிதம் எனப்படுகின்றது.

## प्रारब्धं कर्म किमिति चेत् ।

## इदं शरीरमुत्पाद्य इह लोके एवं सुखदुःखादिप्रदं यत्कर्म तत्प्रारब्धं भोगेन नष्टं भवति प्रारब्धकर्मणां भोगादेव क्षय इति ।

பிராரப்த கர்மம் என்னவென்றால்.

இந்த உடலானதை உண்டாக்கி இந்த உலகத்தில் இப்படிப்பட்ட இன்ப - துன்பங்களை கொடுப்பதான எந்த கர்மமோ அது பிராரப்தமாகும்.

அனுபவிப்பதால் அழிவை அடைகின்றது. பிராரப்த கர்மமானது அனுபவிப்பதாலேயே அழிவு என்று.

**விசாரம்**

பிராரப்தம் நம்முடைய இந்த பிறவியின் ஜாதி (வகை), ஆயுல் மற்றும் அனுபவத்தினை நிச்சயிப்பது என்பதால் அது பலனைக்கொடுக்க ஆரம்பித்துவிட்டது. எது பலனை கொடுத்துவிட்டதோ அதனை நாம் நீக்க முடியாது, எது பலனைக்கொடுக்க ஆரம்பித்துவிட்டதோ அதனையும் நீக்க இயலாது, எது பலன் தராமல் இருக்கின்றதோ அதனைமட்டுமே நாம் நீக்க, அழிக்க இயலும் என்பதால் சன்சிதம் மற்றும் ஆகாமி கர்மங்கள் மட்டும் இந்த வகையில் அழியும், பிராரப்தம் நாம் அனுபவித்தே அழிக்க இயலும். ஆனால் ஞானமானது எல்லா கர்மங்களையும் அழிக்கும் என்று கூறப்பட்டதே என்றால், சரியே, கர்ம்மானது பல என்பதால் அங்கு பகுவசனம் (பன்மை) உபயோகிக்கப்பட்டது. எவ்வாறு நாணிலிருந்து புறப்பட்ட அம்பு இலக்கை அடையாமல் நிக்காதோ அவ்வறே இந்த பிராரப்த கர்மமும் என்று கூறுவர்.

உண்மையில் கர்மங்கள் அறிவில்லாதவர்க்கே, அஞ்ஞானிகளுக்கே, ஞானிகளுக்கோ பிரம்மத்தை தவிர வேறு எதுவுமில்லாததால், பிரம்மம் கர்ம சம்பந்தமற்றதால் (அசங்கம்) கர்மம் என்பது அக்ஞானிகளின் பார்வையிலேயே என்பது வேதாந்த ரகசியம்.

**सञ्चितं कर्म ब्रह्मैवाहमिति निश्चयात्मकज्ञानेन नश्यति ।**

சன்சித கர்ம்மானது 'நான் பிரம்மமே' என்ற தீர்மாணமான அறிவினால் அழிகிறது.

**आगामि कर्म अपि ज्ञानेन नश्यति किंच आगामि कर्मणां नलिनीदलगतजलवत् ज्ञानिनां सम्बन्धो नास्ति ।**

ஆகாமி கர்மமானதும் ஞானத்தினால் அழிகின்றது. ஆனால் ஆகாமி கர்மங்களானது தாமரை இலை தண்ணீரைப்போல ஞானிகளை தீண்டுவதில்லை.

**किंच ये ज्ञानिनं स्तुवन्ति भजन्ति अर्चयन्ति तान्प्रति ज्ञानिकृतं आगामि पुण्यं गच्छति ।**

அதுமட்டுமல்லாது, எவர் ஞானியை போற்றுகின்றனரோ, புகழுகின்றனரோ, பூஜிக்கின்றனரோ அவர்களுக்கு ஞானி செய்த ஆகாமி கர்மத்தின் புண்ணியம் சேருகின்றது.

**ये ज्ञानिनं निन्दन्ति द्विषन्ति दुःखप्रदानं कुर्वन्ति तान्प्रति ज्ञानिकृतं सर्वमागामि क्रियमाणं यदवाच्यं कर्म पापात्मकं तद्गच्छति ।**

எவர் ஞானியை வெறுக்கின்றனரோ, தூற்றுகின்றனரோ, துன்புறுத்துகின்றனரோ அவர்களுக்கு ஞானி செய்த எல்லா ஆகாமி கர்மமானது எது கூறப்பட இயலாத பாவ கர்மமோ அது சென்றடைகின்றது.

**तथा चात्मवित्संसारं तीर्त्वा ब्रह्मानन्दमिहैव प्राप्नोति ।**

அதனால் ஆத்மாவினை அறிந்தவர் சம்சாரத்தி கடந்து பிரம்மானந்தத்தினை இங்கேயே அடைகின்றார்.

**விசாரம்**

இங்கேயே அடைகின்றார் என்றால், அது அடையப்பட்டது என்று கூறப்பட்டதால், எது எது அடையப்பட்டதோ அது அது அநித்தியம் என்ற நியாயப்படி ஆத்ம ஞானமும் அநித்தியம் என்பதால், நிரந்தரமாக துன்பம் நீங்குவது என்பது இயலாது என்றால், தவறு, ஞானமானது வேறு விஷயத்தினைப்பற்றி இருந்தால் இந்த குற்றம் உண்டாகும், ஆனால், தன்னைப்பற்றிய அறிவானதால், தான் எப்பொழுதும் சச்சிதானந்த பிரம்மமான பரம்பொருளாக இருந்தாலும் அறியாமையால் தன்னை வெவேறாக நினைத்துக்கொள்வதால், எவ்வாறு, நாம் தொலைத்துவிட்டதாக நினைத்து தேடும் கழுத்திலிருக்கும் மாலையானது, வேறொருவர் (குரு) அது கழுத்திலேயே இருக்கின்றது எனும்போது, நம்முடைய துன்பம் நீங்குவதோடல்லாமல் இன்பமும், அடைந்துவிட்டோம் என்று, அத்துனை நேரமும் அது கழுத்திலேயே இருந்தாலும், அப்படியே இங்கும். **பிரம்மவித் ஆப்னோதி பரம்** பிரம்மத்தினை அறிந்தவர் பரத்தினை (பிரம்மம்) அடைகின்றார், **பிரம்மவேத பிரம்மைவ பவதி, பிரம்மவித் பிரம்மைவ பவதி**

பிரம்மத்தினை அறிந்தவர் பிரம்மாகவே ஆகின்றார், இருக்கின்றார் என்று பொருள்.

## तरति शोकमात्मवित् इति श्रुतेः।

துன்பத்தினை கடக்கின்றார் ஆத்மாவினை உணர்ந்தவர் என்று ஷ்ருதியும்.

**விசாரம்**

ஆத்மாவினை உணர்ந்தவர் துன்பத்தினை கடக்கின்றார் என்று வேதத்தில் கூறப்பட்டுள்ளது, துன்பமானது அவித்தை காரியமானதால், ஆத்மவித் அவித்தை நீங்கியவறானதால். **தத்ர கோ மோஹ க: ஷோக எகத்வமனுபஷ்யத** அங்கு மயக்கம் ஏது, துன்பம் ஏது இரண்டற்ற நிலையினை பார்ப்பவருக்கு. கீதையிலும் **நஷ்டோ மோஹ ஸ்மிருதிர்லப்த** மயக்கமானது, அறியாமை, நீங்கியது நினைவு, உண்மை இயல்பை குறித்தது, அடையப்பட்டது என்று.

## तनुं त्यजतु वा काश्यां श्वपचस्य गृहेऽथ वा।

## ज्ञानसंप्राप्तिसमये मुक्ताऽसौ विगताशयः। इति स्मृतेश्च।

உடலை விடட்டும் காசியிலோ, புலால் உண்பவன் வீட்டிலோ, ஞானத்தினை அடைந்த நேரத்தில் இந்த முக்தரானவர் பற்றற்றவரானதால். என்று ஸ்மிருதியும்.

## इति तत्त्वबोधप्रकरणं समाप्तम्।

**தத்துவபோதபிரகரணம் முற்றிற்று.**

**தத்துவவிசாரலஹரி முற்றிற்று.**